பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 24 வெள்ளிக்கிழமை (09.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 13

# தனியார் துறையை முற்றாக ஓரம்கட்டி

# அரச துறையை ஊக்குவிக்கும் பட்ஜெட்!



பட்ஜெட்டைச் சமர்ப்பிக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ.

## ஜனாதிபதி சமர்ப்பிப்பு

கொழும்பு,டிசெம்பர்.9

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிதி, திட்டமிடல் அமைச்சர் என்ற முறையில் தமது அரசின் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றில் நேற்றுச் சமர்ப்பித்தார். தனியார் துறையை முற்றாகக் கவனிக்காமல் ஓரங்கட்டி, அரச துறையை ஊக்குவிக்கும் வகையில் வரவு - செலவுத் திட்ட யோசனைகள் அமைந்திருந்தன.

பட்ஜெட் உள்ளடக்கம் 13ஆம் பக்கத்தில்

தம்மோடு அணி சேர்ந்திருக்கும் இடதுசாரிகளான ஜே. வி. பியினரின் கொள்கைப் போக்கையும் எதிர்பார்ப்பையும் நிறைவு செய்யும் விதத்திலான விடயங்களைத் தமது வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடக்கியிருந்ததை அந்த யோசனைகள் வெளிப்படுத்தின.

ஆர்ப்பாட்டங்களோ, ஆரவாரங்களோ இன்றி நண்பகல் 12.45 மணிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சபைக்குள் பிரவேசித்தார்.

வழமையாக ஒவ்வொரு நிதியமைச்சரும் சுமந்துவரும் வரவு - செலவுத்திட்ட உரை அடங்கிய கறுப்புப்பெட்டியைக் காணவில்லை. சர்வ சாதாரணமாக ஒரு கோவைக்கட்டுடனேயே சபைக்குள் வந்தார் ஜனாதிபதி.

சபைக்குள் வந்தவுடனேயே அவர் வரவு - செலவுத் திட்ட உரையை ஆரம்பித்துவிட்டார்.

வரவு - செலவுத்திட்டம் வழமையாக இரண்டு பகுதிகளாக வெளியிடப்படும்.

முதலாவதாக, அடுத்த ஓர் ஆண்டில்

(13ஆம் பக்கம் பார்க்க)

### இரண்டாவது நாளாக மாணவர் போராட்டம்

## வீதிகளை மறித்து ரயர்கள் எரிப்பு; இராணுவத்துக்கு எதிராகக் கோஷம்!

யாழ்ப்பாணம், டிசெ.9

பாடசாலைகளை ஆக்கிரமித்தும் அவற்றின் அருகே முகாமிட்டும் இருக்கும் படையினரை வெளியேறுமாறு கோரி யாழ். மாணவர்கள் மேற்கொண்டுவரும் வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் மாவட்டம் முழுவதும் தொடர்ந்து இடம்பெற்றது. ஆங்காங்கே மாணவர்கள் வீதிகளில் ரயர்களைப் போட்டு எரித்தும் தடைகளை ஏற்படுத்தியும் இராணுவத்தினருக்கு எதிராக வன்முறைகளில் இறங்கியும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களைக் கலைப்பதற்காக இராணுவத்தினர் வான் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

வடமராட்சியில் கடந்த திங்களன்று ஆரம்பித்த இந்த எதிர்ப்புப் போராட்டம் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்டம் முழுவதும் பரவியது. நேற்று அது மேலும் தீவிரமடைந்தது. சில இடங்களில் படையினருக்கும் மாணவர்களுக்கும் இடையே முறுகல்நிலையும் ஏற்பட்டது. கண்காணிப்புக் குழுவினர் அப்பகுதிகளுக்கு விரைந்து சமரச முயற்சி

(16ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவத் தளபதியின் கொடும்பாவி எரிப்பு!

கரவெட்டி,டிசெ.9

வடமராட்சி ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி என்பவற்றின் அருகே படையினரின் நிலைகள் புதுப்பிக்கப்படுவதை ஆட்சேபித்து மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்றுப் புது வடிவம் பெற்றது. இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகாவின் கொடும்பாவியை அவர்கள் எரித்தனர்.

முற்பகல் 10 மணியளவில் வீதியில் கூடிய மாணவர்களும் பொதுமக்களும் இராணுவத் தளபதியின் கொடும்பாவியை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். பருத்தித்துறை,ஓடக்கரை வீதி வழியாக நகர்ந்த இந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதியை இன்று அகாஷி சந்திப்பார்

கொழும்பு, டிசெ.9

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் ஆரம்பிக்கப்படவுள்ள அமைதிப் பேச்சுகள் மற்றும் இலங்கையின் தற்போதைய நிலை குறித்து இந்தப் பேச்சுகளின்போது ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களையும் அகாஷி சந்தித்துப் பேசவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

### வீதிமறியல் இன்று இல்லை: வகுப்பு பகிஷ்கரிப்பு மட்டுமே!

#### தமிழ் மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9

ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களின் நலன்கருதி இன்று வகுப்பு பகிஷ்கரிப்புப் போராட்டம் மட்டுமே நடைபெறும் என்றும் -

வீதி மறியல் போராட்டங்கள் எவையும் நடைபெறமாட்டாது என்றும் -

யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது விடயமாக தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

சிங்கள ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மாணவர்களாகிய எங்களுடைய அடிப்படை உரிமைகளை வென்றெடுக்குமுகமாக கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் எமது அழைப்பின்பெயரில் குடாநாடு எங்கும் மாண

(16ஆம் பக்கம் பார்க்க)

### நோர்வேத் தூதுவர் நேற்று முல்லைத்தீவுக்கும் விஜயம்

புதுக்குடியிருப்பு,டிசெ.9

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்றுப் பிற்பகல் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம்செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டார்.

நேற்றுக்காலை விமானம் மூலம் யாழ். குடாநாட்டிற்கு வருகைதந்த நோர்வேத்தூதுவர் பிற்பகல் ஏ-9 வீதியூடாக முல்லைத்தீவுக்கு விஜயம் செய்தார்.

முல்லைத்தீவு மாவட்டத் திட்டமிடல் செய

(16ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல்கள் தொடர்ந்தால் உடன் கடும் நடவடிக்கையாம்

### குடாநாட்டில் புதிய பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு,டிசெ.9

யாழ். குடாநாட்டில் புதிய பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று அமுலுக்குவரவிருக்கின்றது. இதன்படி குடாநாட்டில் படையினருக்கு எதிராக இனிமேல் வன்முறைகள் இடம்பெறும் பட்சத்தில் படையினர் கடும் நடவடிக்கைகளில் இறங்குவர்.

சமீபகாலத்தில் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த பலர், வன்செயல்களினால் கொல்லப்பட்டிருப்பதையடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் இந்தப் புதிய நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று வட பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு களநிலைமைகளை ஆராய்ந்த பாதுகாப்பு உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவின் அறிவுறுத்தல்களின் பேரில் இந்த நடவடிக்கை பற்றி முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் வன்முறைகள் குறித்து நோர்வே கவலை

### தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9

''குடாநாட்டில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்தச் சம்பவங்கள் எமது கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளன. அங்கு பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்துப் பெரும் கவலை கொண்டிருக்கின்றோம்'' - என்று இலங்கைக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுக் காலை வருகைதந்த அவர் யாழ். நிலைமைகள் தொடர்பாக மேற்கண்டவாறு 'உதயன்'இற்குத் தெரிவித்தார்.

விமானம் மூலம் பலாலி வந்தடைந்த அவர், முற்பகல் 11 மணியளவில் யாழ்.செயலகத்துக்கு வந்தார். அரச அதிபர் கே.கணேஷை சந்தித்தார். அரைமணி நேரம் அவருடன் உரையாடி குடாநாட்டு நிலைமைகளைக்

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நோர்வேத் தூதர் - தமிழ்ச்செல்வன் வன்னியில் இன்று முக்கிய சந்திப்பு

கிளிநொச்சி,டிச.9

நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று காலை 9.30 மணிக்கு விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துகிறார். நேற்று மாலை அவர் வன்னி வந்து சேர்ந்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை சந்தித்துப் பேசும் தூதர், தற்போதைய அரசியல் நிலை, சமாதான முயற்சிகளுக்கான சாத்தியம் என்பன குறித்து ஆராய்வார் என்று தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், நேற்றுமுன்தினம் பிற்பகலில் நோர்வேத் தூதரகம் விடுத்த செய்திக்குறிப்பில் "நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தூதர் என்ற வகையில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப்பகுதிக்குச் செல்கிறார். அனுசரணையாளராகச் செல்லவில்லை. சமாதான முயற்சிகளில் இரு தரப்பினருக்கும் இடையில் தகவல்களைப் பரிமாற மாட்டார்" என்று தெரி விக்கப்பட்டிருந்தது.



இந்நிலையில், நேற்றுமுன்தினம் பிற்பகலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நோர்வேத் தூதரை அழைத்துக் கலந்துரையாடினார். சமாதான முயற்சிகளில் அனுசரணைப் பணியை மேற்கொள்ளுமாறும் உத்தியோகபூர்வமாகக் கேட்டிருந்தார். (எ-3)

## களுவாஞ்சிக்குடியில் ஒருவர் வெட்டிப்படுகொலை!

களுவாஞ்சிக்குடி - பகலூர் நாகபுரத்தில் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

மரணமானவர் சாமித்தம்பி தியாகராஜா என்று உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டார். இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இவர் வெட்டிக்கொல்லப்பட்டதன் எதிரொலியாக களுவாஞ்சிக்குடி - பகலூர் நாகபுரத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான 5 வீடுகளுக்குத் தீவைக்கப்பட்டுள்ளது. களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-6-7)

## அருட்கவி விநாசித்தம்பி நலன் பெறவேண்டி ஆலயங்களில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,டிசெ.9

கடும்சுகவீனமுற்றுள்ள மூதறிஞரும், சமயப் பிரசாரகரும், இந்துசமயப் பேரவையின் தலைவருமான அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா நலன் பெறவேண்டி விசேட பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்றையதினம் சைவ ஆலயங்கள், சைவ சமய நிறுவனங்களில் அருட்கவி விநாயசித்தம்பியின் நலன் வேண்டி விசேட பிரார்த்தனைகளை ஒழுங்குசெய்து நடத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை -

அளவெட்டி நர்கேஸ்வரம் ஆலயச் சூழலில் தற்போது தங்கியிருக்கும் அருட்கவி விநாசித்தம்பியின் இல்லத்திற்கு நேற்றையதினம் சென்ற சமயப் பிரமுகர்கள் திருமுறைகளைப்பாடி அருட்கவி ஐயா நலன்பெற வேண்டிப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (எ)

## ஆசிரிய மாணவர் பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்தது

யாழ்ப்பாணம்,டிசெ.9

பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்குவந்தது.

மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஆகியவற்றின் மாணவர்கள் கடந்த 30 ஆம் திகதி தொடக்கம் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி மேற்கொண்ட பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்களும் தமது விரிவுரைகளையும் பரீட்சைகளையும் பகிஷ்கரித்திருந்தனர்.

தற்போது காத்தான்குடி பொலீஸ் அத்தியட்சகர் பாதிக்கப்பட்ட கல்லூரிகளின் அதிபர்களுக்கு எழுத்துமூலமாக அனுப்பிய கடிதத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து மட்டக்களப்பு பகிஷ்கரிப்புப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இதனால் பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர்களும் தமது போராட்டத்தை நிறுத்திக் கொண்டனர்.

கலாசாலையில் நேற்றுமுதல் விரிவுரைகள் வழமை போல் இடம்பெற்றன என்றும் -

தற்போது நடைபெறவிருந்த அரையாண்டுப் பரீட்சைகள் ஜனவரி இரண்டாம் வாரத்தில் நடைபெறும் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-203)

# யாழ். பல்கலைக்கழக சூழலில் படையினர் குவிப்பு: அதனைக் கண்டித்து இன்று வகுப்பு பகிஷ்கரிப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ். பல்கலைக்கழக வளாகத்தைச் சூழ படையினர் குவிக்கப்பட்டமையைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இன்று விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கும் போராட்டத்தை முன்னெடுக்கவிருக்கின்றனர்.

இது தொடர்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நேற்றுக்காலை யாழ். பல்கலைக்கழகம் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியைச் சூழ உள்ள பிரதேசங்களைச் சுற்றிவளைத்த இராணுவம் மாணவர்களை அச்சுறுத்தும் நோக்குடன் செயற்பட்டதுடன், வீதியால் பயணித்த மக்களையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இச்செயலானது மாணவர்களை சீண்டி, குழப்பத்தை ஏற்படுத்துகின்ற செயலாகவே உள்ளது.

அத்துடன், பல்கலைக்கழக வீதிகளில் ரோந்து செல்வதும், தேவையற்ற விதத்தில் தரித்து நிற்பதும், மாணவர்களுக்கு ஆத்திரமூட்டும் செயல்களைச் செய்வதும் இராணுவத்தினரின் அன்றாட நடவடிக்கையாக இருக்கின்றது. இச்செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்துடன், புதிய இராணுவத் தளபதிக்கு அவசரமானதும், அவசியமானதுமான வேண்டுகோளை விடுக்கின்றோம். அது யாதெனில்:-

பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள இராணுவ முகாம்களை உடனடியாக அகற்றி, இராணுவ ரோந்து நடவடிக்கைகளை உடன் நிறுத்தி, மாணவர்களின் இயல்பான கல்வி நடவடிக்கைக்கு வழிவிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம். மாறாக, பதட்டமான சூழலைத் தோற்றுவித்து மாணவர்களை அச்சுறுத்தும் நோக்குடன் இராணுவம் தொடர்ந்தும் ஈடுபட்டால், மாணவர்களாகிய நாம் எமது கற்றல் செயற்பாடுகளை நிறுத்தி, இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக கிளர்ந்தெழுந்து தொடர்ச்சியாகப் போராட்டங்களில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

அத்துடன், தற்போதைய மாணவர்களினதும், மக்களினதும் போராட்டங்களுக்கு மதிப்பளிக்காது, தொடர்ந்தும் இராணுவ எந்திரத்தைப் பயன்படுத்தி மக்களின் அபிலாஷைகளை அடக்க முயல்வீர்களேயானால் குடாநாட்டில் என்றுமில்லாத அளவுக்கு எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை உருவாவதை யாராலும் தடுக்கமுடியாது போகும் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றோம் - என்றுள்ளது. (எ-3)

## கருணா குழுவினரைச் சுட்டுக் கொன்றவரின் சகோதரிகள் கோரமாகச் சுட்டுப்படுகொலை

அம்பாறை மாவட்டம் கஞ்சிகுடிச்சாறு பகுதியில் வைத்து இனியபாரதி உள்ளிட்ட கருணா குழு உறுப்பினர் நால்வரை சுட்டுக் கொன்றுவிட்டு விடுதலைப் புலிகளிடம் தஞ்சமடைந்த இருவரில் ஒருவரான புகழ்வேந்தனின் இரு சகோதரிகள் நேற்று அதிகாலை மட்டக்களப்பு மாவட்ட வந்தாறு மூலையில் உள்ள அவர்களின் வீட்டில் வைத்துக் கோரமாகச் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்கள் இருவரில் ஒருவரின் இரண்டு வயதுப் பெண் குழந்தையும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்தது. தமது உறுப்பினர்கள் நால்வர் கஞ்சிகுடிச்சாறு சம்பவத்தில் உயிரிழந்தமைக்கு பழிவாங்குவதற்காக சம்பந்தப்பட்டவரின் சகோதரிகள் அவர்களின் வீட்டில் உறங்கிக் கொண்டிருக்கையில் அவர்களைச் சுட்டுக்கொன்று இவ்வாறு கோழைத்தனமான தாக்குதலில் ஒட்டுப்படைகள் ஈடுபட்டன எனக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

ஏறாவூர் பொலீஸ் பிரிவுக்குட்பட்ட வந்தாறுமூலை பலாச்சோலைப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை இக்கொடூரத் தாக்குதல் இடம்பெற்றிருக்கின்றது.

கஞ்சிகுடிச்சாறில் இடம்பெற்ற சம்பவத்தில் இனியபாரதி உட்பட நான்கு கருணா குழுவினர் கொல்லப்பட்டனர். அவர்களைச் சுட்டுக்கொன்றுவிட்டு அவர்களோடு இருந்த இருவர் புலிகளிடம் சாரணடைந்தனர். அவ்வாறு சரணடைந்தவர்களுள் ஒருவர் புகழ்வேந்தன். அவரின் சகோதரிகள் இருவரே இவ்வாறு மோசமான முறையில் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர்.

துரைராஜா யோகேஸ்வரி (வயது 24) என்பவரும் அவரது சகோதரியான குகன் வதனி (வயது 18) என்பவருமே கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் யோகேஸ்வரிக்கு இரண்டு வயதுக் குழந்தை ஒன்றும், ஒரு மாத சிசு ஒன்றும் உள்ளன. இரண்டு வயதுக் குழந்தையான துரைராஜா பேணுஜாவும் இச்சம்பவத்தில் காயமடைந்துள்ளது.

உயிரிழந்த மற்றவரான குகன் வதனி நான்கு மாத சிசுவின் தாயாராவார்.

இவர்கள் தங்கியிருந்த வீட்டுக்கு வந்த இனம்தெரியாத ஆயுதம் தாங்கிய இரண்டு பேர் கொலையுண்டவர்களின் கணவர்மாரைப் பற்றி விசாரித்துள்ளனர். கணவர்மார் இரண்டு பேரும் சம்பவம் இடம்பெற்ற வேளை வீட்டில் தங்கியிருக்கவில்லை.

இதனால் பின்னர் ஏற்பட்ட வாக்குவாதத்தின்போது ஆத்திரமடைந்த ஆயுதபாணிகள் முதலில் கைக்குண்டொன்றை வீசிவிட்டு துப்பாக்கிப் பிரயோகமும் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

சடலங்கள் இரண்டும் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். இச் சம்பவத்தை மட்டக்களப்பு அரசியல்துறையினர் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (எ-க)

## மழைநீரினால் நிறைந்திருந்த கிணறு திடீரென வற்றி நீரின்றி வரண்டது

### மீசாலை வடக்கு வீடொன்றில் சம்பவம்

தென்மராட்சி,டிசெ.9

மழைகாலத்தில் நிறைந்திருந்த கிணற்று நீர் திடீரென நீரின்றி வற்றி வரண்டது.

மீசாலை வடக்கு - தட்டான் குளப்பிள்ளையார் கோவில் வீதியில் உள்ள வீடொன்றின் கிணறே திடீரென வற்றியுள்ளது.

கிணற்றிலிருந்து நீர் திடீரென வற்றியதால் கிணற்றுக் கட்டடத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதுடன் நிலத்திலும் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

25 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இக் கிணற்றின் நீர் காவிநிறமாக (மஞ்சள்) இருந்ததால் கிணற்றினுள் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு குடிதண்ணீர் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் கிணற்றில் நீர் நிறைந்து காணப்பட்டுத் திடீரென நீர் வற்றிவிட்டதாகவும் - கூறப்பட்டது.

கிணற்றைச் சுற்றி நிலத்தில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதால் அருகில் சென்று கிணற்றைப் பார்வையிட பொதுமக்கள் அஞ்சுகின்றனர். (எ-117)

## சந்திரிகாவுக்கு சலுகைகள் வழங்குவதை எதிர்த்து மனு

### 'ராவய' ஆசிரியர் ஐவன் தாக்கல்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு மாதிவெலவில் ஒன்றரை ஏக்கர் காணியொன்றையும் ஏனைய பல சலுகைகளையும் வழங்குவதற்கு அமைச்சரவை எடுத்துள்ள முடிவை இடைநிறுத்துமாறு உத்தரவிடக் கோரி 'ராவய' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் விக்டர் ஐவன் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 'ரிட்' மனுவொன்றைத் தாக்கல் செய்திருக்கிறார்.

இந்த மனுவில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, அமைச்சரவையின் அனைத்து உறுப்பினர்கள், சட்டமா அதிபர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பொதுமக்களின் நலன்கருதி நான் இவ்வாறான பல மனுக்களை கடந்த காலங்களில் தாக்கல் செய்திருக்கிறேன். அதுபோல் பத்திரிகையிலும் பல விடயங்களை வெளியிட்டிருக்கிறேன். முன்னாள் ஜனாதிபதிக்கு மாதிவெல தெல்கஹவத்தையில் ஒன்றரை ஏக்கர் காணியை ஒதுக்கிக் கொடுப்பதற்கு செப்ரெம்பர் ஐந்தாம் திகதி அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 1986ஆம் ஆண்டின் நான்காம் இலக்க சிறப்புரிமைச்சட்டம் மீறப்பட்டுள்ளது.

அதேபோல் முன்னாள் ஜனாதிபதி என்ற போர்வையில் அவருக்கு பல்வேறு சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. எனவே, இவற்றை இடைநிறுத்தும் உத்தரவை நீதிமன்றம் பிறப்பிக்கவேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. (எ-க)



நேற்றுக்காலை யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்த இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் யாழ். செயலகத்தில், அரச அதிபரைச் சந்தித்துவிட்டுதிரும்பியபோது... (படம்: கவிதரன்)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## நோர்வேயின் நிபந்தனை

அமைதி நடவடிக்கைகளுக்கு அனுசரணைப் பணி வகிப்பதற்கு நோர்வேயை அழைக்கும் விடயத்தில் மறுப்போடு அடம் பிடித்து வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேறு வழியின்றி இறங்கி வந்துவிட்டார்.

ஆனால், இழுத்த இழுப்புக்கெல்லாம் எடுபடுவதற்குத்தான் ஒன்றும் கையாலாகாத தரப்பு அல்ல என்பதை நிரூபிக்கும் விதத்தில் நோர்வேயின் பிரதிபலிப்பு வந்திருக்கிறது.

அனுசரணைப் பணியை வகிக்கும்படி காலதாமதமாக நோர்வே அழைக்கப்பட்டாலும், அதனை மேற்கொள்வதற்கு நோர்வேத் தரப்பிலிருந்து சில நிபந்தனைகள் விதிக்கப்படும் என்பதை இப்பத்தியில் சாடை மாடையாக நேற்றே கோடி காட்டியிருந்தோம். அது சரி என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

நோர்வேத் தரப்பை அனுசரணைப் பணியை வகிக்கும்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைத்த அதேசமயம், நோர்வேத் தூதரகம் கொழும்பில் விடுத்த அறிக்கையில் இந்த நிபந்தனை கோடி காட்டப்பட்டிருக்கின்றது.

*"இலங்கையில் உள்ள தரப்புகளுடன் அரசியல் மட்டத்தில் கலந்துரையாடல் நடத்தி நோர்வேயின் எதிர்காலப் பங்களிப்புக் குறித்து ஒரு முடிவை எட்டிய பின்னர், இலங்கை அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினரும் அழைத்தால் தனது அனுசரணைப் பணியைத் தொடர்வதற்கு நோர்வே தயாராக இருக்கின்றது என்பதை ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நோர்வே வெளிப்படுத்தியிருந்தது"* - என்று அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

*தற்போது நோர்வேத் தூதுவர் வடக்கே மேற்கொண்டிருக்கும் பயணம் குறித்து சுட்டிக்காட்டும் அந்த அறிக்கை "மேற்படி கலந்துரையாடல் நிலுவையில் இருக்க, யாழ்ப்பாணத்துக்கும், வன்னிக்கும் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் விஜயம் செய்கின்றார். இவ்விஜயம் நோர்வேத் தூதுவர் என்ற முறையில் அவர் மேற்கொள்வது. அமைதி முயற்சிகளுக்கு அனுசரணைப் பணி வகிக்கும் தரப்பு என்ற முறையில் அல்ல." - என்று தெளிவுபடுத்தியது.*

அதுமட்டுமல்ல. அதற்கு அப்பாலும் அந்த அறிக்கை இன்னொரு விடயத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

*"எதிர்காலத்தில் (அனுசரணையாளர்கள் என்ற முறையில்) நோர்வேயின் பங்களிப்புக் குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெறும் வரை (தீர்மானங்கள் எட்டப்படும் வரை) அமைதி முயற்சிகளில் சம்பந்தப்பட்ட இருதரப்புகள் இடையேயும் அவர் (நோர்வேத் தூதுவர்) எந்தச் செய்திப் பரிமாற்றத்திலும் ஈடுபடமாட்டார்." - எனத் தெட்டத் தெளிவாகக் கூறுகிறது அந்த நோர்வேத் தூதரக அறிக்கை.*

இந்த அறிக்கை மூன்று விடயங்களைப் புலப்படுத்துகின்றது.

ஒன்று - எதிர்காலத்தில் நோர்வே ஆற்றக்கூடிய அனுசரணைப் பங்களிப்புக் குறித்து இலங்கையில் அரசியல் கட்சிகள் தமக்குள் கலந்துரையாடல் நடத்தி ஒரு முடிவுக்கு வரவேண்டும். அது இன்னும் நடக்கவில்லை. அது நிலுவையாக இருக்கிறது என நோர்வே கருதுகின்றது.

இரண்டாவது - இன்னும் அனுசரணைப் பணியை நோர்வே மீள ஆரம்பிக்கவில்லை. இப்போது நோர்வேத் தூதுவர் வடக்கே வந்திருப்பது அனுசரணைப் பணியின் அடிப்படையில் அல்ல, நோர்வேத் தூதுவர் என்ற ரீதியில்தான் என்று நோர்வே கூறியிருப்பது அதை உறுதிப்படுத்துகிறது.

மூன்றாவது - நோர்வேயின் பங்களிப்புக் குறித்து ஒரு திட்டவட்டமான தீர்மானத்துக்கு - அரசியல் கட்சிகளின் கலந்துரையாடல் மூலம் - இலங்கை வரும் வரையில் நோர்வேயின் அனுசரணைப் பணி ஆரம்பிக்கவே ஆரம்பிக்காது.

ஆக, நோர்வேயின் அனுசரணைப் பணியைத் தொடர்வதில் ஒரு நெருக்கடி - சிக்கல் - இக்கட்டு - முட்டுக்கட்டை - நிலைமை தொடர்கின்றது என்பதே யதார்த்தம்.

அதைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படப் போகின்றன என்பதே கேள்வியாகும்.

முதலில் இலங்கையில் அரசியல் மட்டத்தில் நோர்வேயின் பங்களிப்புக் குறித்து கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வாருங்கள் என்பதுதான் நோர்வேயின் எதிர்பார்ப்பு. வற்புறுத்தல். ஒரு வகையில் நிபந்தனையும் கூட.

அந்த விடயத்தில் தமிழர் தரப்பில் - புலிகள் தரப்பில் - குழப்பம் ஏதுமில்லை. குளறுபடியான, ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துகளும், இழுபறிகளும் இலங்கைப் பக்கத்தில்தான்.

இலங்கை அரசின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இது விடயத்தில் தமக்கெனத் திட்டவட்டமான ஒரு கருத்தைக் கொண்டவர் போலத் தம்மை வெளிக்காட்டவில்லை. ஒருபுறம் அவருடன் கூட்டமைத்துள்ள ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்றவை நோர்வேயை விலக்கப் போகின்றவை போல பீத்துகின்றன. அதை ஆமோதிப்பவர் போல ஜனாதிபதி மஹிந்த நடந்து கொள்கின்றார்.

இப்படி அரசுத் தரப்பு இவ்விடயத்தில் தனக்குள் குளறுபடிபட்டுக்கொண்டிருக்கும்போதுதான் அனுசரணைப் பணியை ஆரம்பிப்பது 'வினையை விலைக்கு வேண்டி மடியில் கட்டிக்கொள்ளுவதுபோல' ஆகிவிடும் என்பது நோர்வேக்கு நன்கு தெரியும்.

அதனால்தான் எங்கள் பங்களிப்புக் குறித்து உங்களுக்குள் ஒரு தீர்க்கமான முடிவை எடுத்துக்கொண்டு வாருங்கள் என்று நோர்வே நிபந்தனை விதித்திருக்கின்றது. இது சரியான, நீதியான நிபந்தனைதான்.

ஆனால், இந்த நிபந்தனைகளையெல்லாம் இலங்கை அரசுத் தரப்பு நிறைவு செய்துவிட்டு வரும்போது காலம் ஓடியிருக்கும். அமைதித் தீர்வு ஒன்றை முன்வைப்பதற்கு இலங்கையின் புதிய ஜனாதிபதிக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் வழங்கிய குறுகியகால கால அவகாசம் முடிந்துவிடும்.

அதன் பின்னர் என்ன நடக்கும் என்பதுதான் கேள்வி.

நோர்வேயின் அனுசரணைப் பங்களிப்புத் தொடர்பாகக் கலந்துரையாடல் மூலம் தென்னிலங்கையிலிருந்து வரும் தீர்மானம், காலதாமதமாகி வந்தால், பிணக்குக்கு இணக்கத் தீர்வு காணும் முயற்சிக்கு அது பயன்தராது என்பது நிச்சயம்.

# பரீட்சார்த்திகளுக்கு பாதிப்பு ஏற்படாவகையில் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும்

### பிரதிப் பரீட்சை ஆணையாளர் அறிவுறுத்து

அச்சுவேலி,டிசெ.9

"பரீட்சைகள் கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் உண்மை; நேர்மை; அர்ப்பணிப்போடு கூடியதாக பரீட்சார்த்திகளுக்குப் பாதிப்பு ஏற்படாத விதத்தில் தமது கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றவேண்டும்".

- இவ்வாறு கூறினார் பரீட்சைத் திணைக்கள பிரதிப் பரீட்சை ஆணையாளர் ஆ.சிவலிங்கம்.

வலிகாமம், கோப்பாய், வடமராட்சிப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் கோப்பாய் கிறிஸ்வத கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்ற அறிவுறுத்தல் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

பரீட்சைக் கடமையில் ஈடுபடுவோர் சகல மட்டத்திலும் அர்ப்பணிப்போடு தமது கடமையை மேற்கொள்வதனால்தான் கடந்த காலங்களில் சிறப்பான முறையில் பரீட்சைகள் நடத்தி முடிக்கப்பட்டன.

கடந்த வருடத்திலும் பார்க்க இந்த வருடம் பரீட்சைக்குத் தோற்றுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதேபோல் தேவைகளும் பிரச்சினைகளும் அதிகரித்தும் உள்ளன.

கடந்த வருடம் பாடசாலை பரீட்சார்த்திகளாக 3 லட்சத்து 74 ஆயிரத்து 411 பேரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 819 பேரும் தோற்றினர். இந்த வருடம் பாடசாலை பரீட்சார்த்திகளாக 3 லட்சத்து 78 ஆயிரத்து 702 பேரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 927 பேரும் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

பரீட்சைக் கடமையில் ஈடுபடும் சகல தரப்பினரும் உண்மையான பரீட்சார்த்தி பாதிக்கப்படாத விதத்தில் தமது கடமையைச் செய்யவேண்டும்.

பரீட்சைக் கடமையில் ஈடுபடுவோர் தமக்கு அடுத்த நிலையில் இருப்போரின் ஆலோசனையை - அறிவுறுத்தலை - ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில், தமக்கு ஏற்படும் சந்தேகங்கள், விளக்கக் குறைவுகளை உயர் அதிகாரிகளிடம் கலந்துரையாடி சரியான முறையில் கடமையை நிறைவுசெய்யவேண்டும்.

இந்த வருடம் கணித பாடம் I பகுதிக்கு உரிய செய்கைமுறையை அதே தாளில் செய்வதற்குப் பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தல் வழங்குவதோடு மேலதிகதாள் வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் - என்றார் அவர். (3-11)

# பட்டப்பின் கல்வி டிப்ளோமா அனுமதிக்கு அடுத்த வாரம் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.9

உயர்பட்டப்படிப்புகள் பீடத்தால் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான அனுமதிப் பரீட்சைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும் என்று உயர்பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைகள் கடந்த 3ஆம் திகதி நடைபெறவிருந்து தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டிருந்தன.

இதேவேளை -

கல்வியியல் முதுமாணிக் கற்கை நெறிக்கான அனுமதிப் பரீட்சைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எனவும் இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் பரீட்சைகள் யாவும் யாழ்.பல்கலைக்கழகத்திலேயே நடைபெறும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், கடந்த ஆண்டு கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்து பட்டம் பெற்ற மாணவர்கள் தமது பட்டச் சான்றிதழ், பரீட்சைப் பெறுபேற்று அறிக்கை என்பவற்றை உயர்பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி அலுவலகத்தில் எதிர்வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

இவற்றைப் பெறவரும் மாணவர்கள் தமது அடையாள அட்டை, பட்டமளிப்பு அங்கியை மீள ஒப்படைத்தமைக்கான பற்றுச்சீட்டு என்பவற்றை வழங்க வேண்டுமெனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-203)

# அளவெட்டி, கைதடி அஞ்சலகங்கள் விரைவில் புதிய கட்டடங்களில்

வலி.கிழக்கு,டிசெ.9

யாழ். மாவட்டத்திலுள்ள அளவெட்டி, கைதடி அஞ்சல் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் நிறுவும் பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வடமாகாணப் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் வீ.குமரகுரு தெரிவித்தார்.

அளவெட்டி, கைதடிபகுதியில் தற்போது வாடகைக் கட்டடம் ஒன்றில் இயங்கிவரும் அஞ்சலகங்களுக்குத் தனியார் சிலர் முன்வந்து காணியை அன்பளிப்பாக வழங்கினர்.

இதன் காரணமாக அஞ்சல் திணைக்களத்தால் அளவெட்டி அஞ்சலகத்திற்கு 70 லட்சம் ரூபாவும் கைதடி அஞ்சல் அலுவலகத்திற்கு 60 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

வட்டுக்கோட்டை, அச்சுவேலி அஞ்சலக அலுவலகத்திற்கும் புதிய கட்டடங்களை நிறுவ மக்கள் காணிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர் என்றும் அந்த அஞ்சலகங்களும் விரைவில் புதிதாக நிறுவப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (த-180)

# வண்ணாத்திப்பாலத்தில் இளைஞர்கள் மீது செவ்வாயன்று படையினர் தாக்குதல்!

கைதடி,டிசெ.9

தமது உறவினர் ஒருவரின் மரணச் சடங்கிற்கெனச் சென்ற இளைஞர்கள் பலர் கண்மூடித்தனமாக இராணுவத்தினரால் தென்னம்மட்டை, பனை மட்டைகள் கொண்டு தாக்கப்பட்டனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை மதியம் புத்தூர் வண்ணாத்திப் பாலத்தடியில் இடம்பெற்றுள்ளது. இரு பாலையில் கிளைமோர் வெடித்ததை அடுத்து கோப்பாய் வீதியில்போக்குவரத்து நிறுத்தப்பட்டதனால் கைதடியைச் சேர்ந்த இந்த இளைஞர்கள் மட்டுவில் ஊடாகச் சென்று வண்ணாத்திப் பாலத்தடியூடாக சிறுப்பிட்டியில் நடந்த மரணச்சடங்கிற்குச் சென்றுகொண்டிருந்தனர்.

அவ்வேளை அப்பகுதியில் நின்ற படையினரே இவ்வாறு இளைஞர்கள் மீது மூர்க்கத்தனமாக தாக்குதலை நடத்தினார்கள் என்று கூறப்பட்டது.

தாக்கப்பட்ட இளைஞர்களில் பலர் பயம் காரணமாக பின்னர் சுன்னாகம் சென்று அங்கிருந்து யாழ்.நகர் சென்று பின்பே கைதடிக்கு வந்து சேர்ந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-75)

# பன்றித்தலைச்சி அம்மன் பெருந்திருவிழா ஆரம்பம்

சாவகச்சேரி,டிசெ.9

சரித்திரப்பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

சப்பரத் திருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 6 மணிக்கும் தேர்த் திருவிழா மறுநாள் காலை 10 மணிக்கும் தீர்த்தத்திருவிழா 17ஆம் திகதி காலை 10 மணிக்கும் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ இ.விஸ்வநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறும்

(த-31)

# கடற்புலித் துணைப் படையின் ஆறாவது அணிக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.9

வடமராட்சியில் கடற்புலிகளின் துணைப்படையின் ஆறாவது அணியினருக்கான பயிற்சி நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள கங்கை அமரன் துணைப்படைப் பயிற்சிக் கல்லூரியில் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரைப் புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் ந.தமிழன்பன் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை யாழ். மாவட்ட கடற்புலிகளின் தளபதி கலாத்தன் ஏற்றினார்.

லெப்ரினன்ட் கேணல் கங்கை அமரனின் திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் ஏற்றிவைத்தார்.

திருவுருவப் படத்திற்கான மலர் மாலையை புலம்பெயர் வாழ் தமிழரான ப.முரளி அணிவித்தார்.

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 106 பேர் பயிற்சி அணியில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர். (த-14)

### நாளை

கார்த்திகை 25
சனிக்கிழமை
10.12.2005
திதி: தசமி
பி.இ. : 01.21 வரை
நட்சத்திரம் : உத்தரட்டாதி
முன்னிரவு : 11.28 வரை
சுபநேரம் : 03.19- 04.49
ராகுகாலம் : 09.19 - 10.49
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தனக்குத் தெரியாதவற்றைப் பற்றிக் கேள்வி கேட்பவன் ஐந்து நிமிடம் மற்றவர்களுக்கு முட்டாளாகத் தெரிவான். கேள்விகள் கேட்கத் தயங்குபவன் வாழ்நாள் முட்டாளாவான்.

- ஓர் அறிஞன்.

## போரூட் மாநாடு நாளை நடக்காது

யாழ்ப்பாணம்,டிசெ.9

போரூட் நிறுவனத்தின் பங்காளர் அமைப்புகளின் மாநாடு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் இந்த மாநாடு நடத்தப்படவிருந்தது. (த-14)

## கணிப்பீட்டுச் செயல்முறைத் தேர்வு

1. யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
2. யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
3. கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

இப்பாடசாலைகளில் தரம் 3,4,5 வகுப்புகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு 12-12-2005 திங்கட்கிழமை மு.ப.9 -12 மணி வரை கணிப்பீட்டுச் செயல்முறைத் தேர்வுகள் நடைபெறும். அனைத்து மாணவர்களையும் தவறாது தத்தம் பாடசாலைகளில் இத்தேர்விற்குத் தோற்றுவதோடு அன்றைய தினம் பாட நூல்களைக் கையளித்து, 18-12-2005 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9மணிக்கு தரம் 1-4 வரை கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் கணிப்பீட்டு அறிக்கைகளையும், பாடநூல்களையும் பெற்றுக் கொள்ளவும்.

- மேற்படி பாடசாலை அதிபர்கள்.

## 07.12.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200800664 இலிருந்து 200816921 வரை

சீட்டிழுப்பு இல. 1665

வெற்றி எண்கள்

**45 58 67 69** சுப்பர் எண் **09**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.1,81,54,150/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெறுவோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,81,54,150/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 36 | 5,000/- | 1,80,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 428 | 1000/- | 4,28,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,391 | 500/- | 6,95,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 21,148 | 40/- | 8,45,920/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 19,962 | 20/- | 3,99,240/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,99,483 | 10/- | 29,94,830/- |
| | | மொத்தம் | 75,43,490/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 80,43,490/- |

**இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 1,89,54,150/-**

தொடர் இல. 300755788 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 டிசம்பர் 10 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கிள் அடங்கிய பரிசு முறையை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மொனராகலை | 200816576-9-84 |
| கேகாலை | 200803705-2-28 |
| கம்பஹா | 200813907-1-01 |
| நுவரெலியா | 200801626-8-54 |
| கொழும்பு | 200815466-3-31 |

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் நாகராசா பாலேஸ்வரி

மண்மகிழ 10-12-1947 | கண்நெகிழ 20-11-2004

(திதி : 09-12-2005)

எம் அன்பின் தெய்வமே!
கண்ணை இமை காப்பதுபோல் காத்து வந்து
அன்பு என்னும் பாசவலையில் எம்மை சிக்க வைத்து
காலனவன் கல் மனதால் எம்மைத் தவிக்கவிட்டு
ஆண்டொன்று ஓடி மறைந்ததம்மா
அன்னை முகம் தெரியாமல் தவிக்கின்றோம்
துடிக்கின்றோம் இப் புவியதனில்.

முகவரி:
8 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. (43791)

துன்பத்தால் துயருறும்:
குடும்பத்தினர்.

## உள்ளூராட்சிவார இறுதி நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.9

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் உள்ளூராட்சிவார இறுதிப்பெருவிழா இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சபைச் செயலாளர் மே.சாந்தசீலன் தலைமையில் இந்த விழா இடம்பெறும்.

பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், சட்டத்தரணி இ.வசந்தசேனன் ஆகியோரும் -

கௌரவ விருந்தினர்களாக மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் (நிகொட்) எந்திரி க.நவரத்தினராசா,சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம்-

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி திணைக்கள சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி அலுவலர் வி.கந்தசாமி, சிரேஷ்ட ஆய்வு அலுவலர் வி.பரமேஸ்வரன்,மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க.முதலியார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் 15 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக உள்ளூராட்சியில் சேவையாற்றிய 10 பேருக்கு 'சிறந்த உள்ளூராட்சி சேவையாளன் பட்டம்' வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

சதுரங்கப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அலுவலர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்படவுள்ளன. (த -185)

## மழையினால் சேதமடைந்த வீதிகளின் விவரம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

அண்மையில் யாழ்.குடாநாட்டில் பெய்த மழையினால் அழிவடைந்த வீதிகள், வாய்க்கால்களின் விவரங்கள் திரட்டப்படவுள்ளன. யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் விவரங்கள் திரட்டுவதற்கான படிவங்களை பிரதேச செயலர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மேற்படி பாதிப்பு அல்லது அழிவு விவரங்களும் அதற்கு செலவான மதிப்பீடுகளும் அவ்வப் பகுதி உள்ளூராட்சி சபைகளுடன் இணைந்த வகையில் திரட்டப்பட்டு பிரதேச செயலரின் சிபார்சுடன் அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கவும். மேற்படி யாழ். குடாநாட்டு சேத விவரங்கள் கொழும்பு சமூக நலத்துறை அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(த-155)

A/L 2007
LOGIC
குறியீட்டு அளவையியல
Sta.- Sun. 4.30 P.m
Mr.இரா.ரமணன்
B.A.Dip.in.Edu.
புதிய வகுப்புகள் Gr.2 முதல 11 வரை
ஆரம்பம்:10.12-8am
SHAMROCK
J/ஈச்சமோட்டை வீதி. (43800)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane,Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422
அனைத்துக் கணனிக்கற்கை நெறிகளிற்கும் இவ் ஆண்டிற்கான இறுதிப் பிரிவுகள் ஆரம்பம்.
December 11ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்து கொள்ளவும். 80% Off
வகுப்புக்கள் ஆரம்பம்:
Batch I(a) :- 09/12/2005 - 09.30-11.30
Batch II(a) :- 10/12/2005 - 11.30-12.30
Batch III(a) :- 11/12/2005 - 02.00-03.00

கலைவாணி கல்வி நிறுவனம்
மானிப்பாய் வீதி, கோப்பாய்.
கல்வியாண்டு -2006
தரம் 3 முதல் O/L வரை
ஆரம்பம் : 10-12-2005
சனிக்கிழமை காலை 8 மணி

MATHS CENTRE
NELLIADY
தரம் 5 முதல் O/L வரை
ஆரம்பம் : 14-12-2005
புதன் பி.ப 3.15 (ப.நே)
(சி/46700)

## யாழ். இந்து ஆரம்ப பாடசாலை பரிசளிப்பு விழாவும் பெற்றோர் தின விழாவும்

*பரிசளிப்பு விழா:* நாளை (10.12.2005) சனிக்கிழமை மு.ப.8.45 மணி

*பிரதம விருந்தினர்:* **திரு.வீ.கணேசராசா** அவர்கள் (அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி)

*பெற்றோர் தினவிழா:* 11.12.2005 ஞாயிற்றுக்கிழமை மு.ப.8.45 மணி

*பிரதம விருந்தினர்:* **திரு.பெ.இ.ரஞ்சன்** அவர்கள் (தலைவர், யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம்)

உரிய தினங்களில் இருநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன

பரிசில் பெறுவோர்:
1. தரம் ஒன்று அனைத்து மாணவர்களும்
2. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிக்கு மேல் பெற்றவர்கள்.
3. தரம் 3,4,5 பரிசுப் பட்டியலின் பிரகாரம் விளம்பரப் பலகையில் உள்ளவர்கள்.

பெற்றோர் தின விழாவில் பங்குபற்றும் மாணவர்களின் பெற்றோர் இன்று கட்டாயம் ஆசிரியர்களைச் சந்திக்கவும்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரும் இன்று பி.ப.3 மணிக்கு ஒன்றுகூடவும்.

- அதிபர்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை. (சி/46701)(42-11-34)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணகத்தில் 23 - 09 - 1932



விண்ணகத்தில் 09 - 11 - 2005

### அமரர் செபமாலை ஆசீர்வாதம்

அன்பால் எம்மை அரவணைத்து
அறிவால் எம்மை உயரவைத்து
நன்நெறியால் வாழ வழிகாட்டிய தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

09.11.2005 அன்று இறைபதமடைந்த எமது குலதெய்வத்தின் இறப்புச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும் அவரது இறுதி யாத்திரையில் கலந்துகொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன், இன்று (09.12.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அல்லாரை செபமாலை மாதா ஆலயத்தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சாய் வடக்கு,
மாதா கோயிலடி,
கொடிகாமம். (43795)(32-11-34)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தம்பு தங்கராசா

**(வவுனியா, ரயில் நிலைய உத்தியோகத்தர்)**



உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா, ரயில் நிலைய விடுதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தங்கராசா 06-12-2005 அன்று காலமானார்.

அன்னார் தம்பு - இராசம்மா தம்பதியரின் அருமைப் புதல்வரும் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னம்மா தம்பதியரின் அருமை மருமகனும் நகுலாம்பிகையின் அன்புக் கணவரும் சிவகரன் (இத்தாலி), திருமதி விஜயரூபன் சிவதர்சினி (ஜேர்மனி), சிவசுதன், துஷ்யந்தன், துஷியந்தி (வவுனியா, சைவப்பிரகாச, O/L மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி பஞ்சாட்சரம் இரத்தினம், புவனசிங்கி, காலஞ்சென்ற மகாதேவன், திருமதி சிறீபாலபவ்ளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் விஜயரூபனின் (ஜேர்மனி) மாமனும் கந்தையா, வாலாம்பிகை, சுப்பிரமணியம், வீரவாகு (ஜேர்மனி), காலஞ்சென்ற சோதிராசா, காலஞ்சென்ற பூபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.526, வெளிக்குளம் பாடசாலை முன்பாகவுள்ள சகோதரியின் (சிறீபாலா ETB) இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக வெளிக்குளம் இந்துமயானத்திற்கு இன்று (09-12-2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெளிக்குளம்
மகாவித்தியாலயத்திற்கு அருகில்,
வவுனியா.
(43793) (24)

தகவல்:
த.சிவசுதன்
T.P.: 0779152518,
0779239430

## கலட்டிச் சந்தி மறியல் காட்சிகள்....





வீதிக்குக் குறுக்கே காரை நிறுத்தி வைத்து மறியல்...



சமரசத்துக்கு வருகை...



கண்காணிப்பு அதிகாரியுடன்...



வீதியில் நின்று ஆக்ரோஷக் குரல்...




படங்கள்: பகீர், சுதா

## வடமராட்சியில் கொடும்பாவி எரிப்புக் காட்சிகள்....



பறை அடித்து ஆரவாரம்...



இறுதி ஊர்வலம்...



கொடும்பாவியாக புதிய இராணுவத் தளபதி...



மாரடித்துக் கதறல்....



வாழை கட்டி அமர்க்களம்...



தீயுடன் சங்கமம்...

படங்கள்: சுந்தரலிங்கம்

# கலட்டிச் சந்திப் படைமுகாமை அகற்றக் கோரிப் போராட்டம்

### படையினர் சூடு! பதிலுக்கு மாணவர்கள் கல்வீச்சு!

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்.கலட்டிச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்றக்கோரி நேற்று முற்பகல் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுற்பகல் 10 மணியளவில் கலட்டிச்சந்திப் பகுதியில் திரண்ட மாணவர்கள் வீதியின் குறுக்கே ரயர்களைப் போட்டு எரித்ததுடன் பழுதடைந்த கார் ஒன்றையும் வீதிக்கு குறுக்கே இழுத்துவிட்டு போக்குவரத்தைத் தடை செய்தனர்.

கையில் சுலோகங்களை ஏந்தியவாறு உரத்துக் கோஷமிட்ட மாணவர்கள் இராணுவ காவலரண்களின் மீது கற்களை வீசினர். இராணுவத்தினர் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன் மாணவர்கள் மீது கற்களையும் வீசினர். இதனையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

உடனடியாக அப்பகுதிக்கு விரைந்த கண் காணிப்புக் குழுவினர் இராணுவத்தினருக்கும் மாணவருக்கும் இடையில் சமரச முயற்சியில் ஈடுபட்டனர். ஆயினும் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமைந்துள்ள இந்த இராணுவ முகாமை அகற்ற வேண்டும் என்று கோஷமிட்டனர்.

இவ்விடயம் தொடர்பாகக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் இராணுவத்தினருடன் பேசியபோது, தமது உயரதிகாரிகளு டன் தொடர்புகொண்டே இது தொடர்பான முடிவை எடுக்கவேண்டும் என்றும் அதுவரை அங்கிருந்து விலக முடியாது என்றும் தெரிவித்துவிட்டனர். இரு தரப்பினரிடமும் சமரச முயற்சிகளில் ஈடுபட்டிருந்த கண்காணிப்புக்குழு அதிகாரிகள் அங்கிருந்து விலகிச்சென்றுவிட்டனர். அவர்கள் சென்ற பிறகும் மாணவர்கள் அங்கிருந்து விலகவில்லை, தொடர்ந்தும் அப்பகுதியில் திரண்டு நின்றதைக் காண முடிந்தது.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதிகளில் உள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. கலட்டிப் பகுதியை அண்மித்த வீதிகள் வெறிச்சோடிக்கிடந்தன.

இதேவேளை -

யாழ்.பல்கலைக்கழகத்தை அண்டிய பிரதான சந்திப் பகுதிகளில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். இதனால் பல்கலைக்கழகத்திற்கு பரீட்சைகள், விரிவுரைகள் போன்றவற்றிற்குச் சென்ற மாணவர்கள் அவசர அவசரமாக வீடுகளுக்குத் திரும்பிச் சென்றதைக் காண முடிந்தது.

பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி போன்ற பகுதிகளிலும் கடைகள் மூடப்பட்டு வெறிச்சோடிக் காணப்பட்டன. தொடர்ந்து இப்பகுதிகள் எங்கும் பதற்றம் நிலவியது.

(த-12-14-190-86)

# வீதி ஓரங்களில் உள்ள பற்றைகளை வெட்டுமாறு படையினர் பணிப்பு!

பருத்தித்துறை வீதி, பலாலி வீதி மற்றும் நல்லூர், கல்வியங்காடு பகுதிகளிலுள்ள பிரதான வீதிகளில் இருமருங்குகளிலும் உள்ள மரங்கள், பற்றைகளை உடனடியாக வெட்டி அகற்றுமாறு அப்பகுதி மக்களைப் படையினர் பணித்திருக்கின்றனர்.

இந்தப் பகுதிகளில் வீதி ஓரமாக உள்ள வீடுகளில் குடியிருக்கும் மக்கள் தத்தமது வீடுகள், வீதி ஓரங்களில் வளர்ந்துள்ள மரம், செடி, கொடிகள், பற்றைகள் அனைத்தையும் வெட்டி அகற்றவேண்டும் என்று படையினர் கூறினர். குறித்த பகுதிகளில் உள்ள வீடுகளுக்கும் கடைகளுக்கும் நேரடியாகச் சென்று படையினர் இது தொடர்பாக அறிவுறுத்தினர்.

அத்தோடு தமது காவலரண்கள் மற்றும் முகாம்களுக்கு முன்பாக உள்ள மரங்களையும் பற்றைகளையும் படையினர் தாங்களே வெட்டி அப்புறப்படுத்துவதையும் காணமுடிகிறது.

சமீப நாள்களாக வீதிகளில் படையினர் மீது கிளைமோர் தாக்குதல்கள் நடத்தப்படுவதையடுத்துத் தமது பாதுகாப்புக் கருதியே படையினர் இந்த நடவடிக்கையினை மேற் கொண்டிருக்கின்றனர்.




பற்றைகளை மக்கள் வெட்டுகின்றனர்.

படம் : நேசன்

குடாநாட்டுப் படையினருக்கான பிரதான விநியோகப் பாதைகளாக பலாலி வீதி, பருத்தித்துறை வீதி ஆகியவற்றில் பற்றைகளை வெட்டி அகற்றத் தாமதிப்போர் படையினரால் கடு தொனியில் மிரட்டப்ப கின்றனர் என்றும் மக்க கூறுகின்றனர்.(த-49-1





யாழ். பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் பாபாவின் 80ஆவது அவதார தின விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினரான யாழ். மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் சொற்பொழிவாற்றுவதையும் நிலையத்திற்கு அண்மையிலுள்ள பாடசாலைகளின் நாநூறுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்குப் பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படுவதையும் வருகைதந்த சாயி பக்தர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (ஐ)

# போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை புத்தூர் மேற்கில் ரூ.36 லட்சம் செலவில் அமைப்பு

அச்சுவேலி,டிசெ.9

முப்பத்தாறு லட்சம் ரூபா செலவில் புத்தூர் மேற்கு, கிந்திட்டியில் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை நிறுவப்படுகின்றது.

'ஜி.ரீ.இசற்.' நிறுவனத்தின் நிதி உதவியுடன் புத்தூர் - சுன்னாகம் வீதியில் கிந்திட்டியில் பனம் - தென்னம் கள்ளைப் போத்தலில் அடைப்பதற்கான தொழிற்சாலை நிறுவப்பட்டு வருகின்றது.

வலி.கிழக்குப் பிரதேசம் மற்றும் அதனோடு சேர்ந்த அயல் பிரதேசங்களில் கணிசமான அளவு கள் உற்பத்திசெய்யப்படுவதால் சில பருவகாலங்களில் விற்பனை செய்ய முடியாத கள் பாதுகாக்கமுடியாமல் ஊற்றப்படுவது வழமை.

மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் பனம் - தென்னம் கள்ளைப் பதப்படுத்தி போத்தலில் அடைப்பதன் மூலம் கள் தட்டுப்பாடான பகுதிகளுக்கு எடுத்துச்செல்வதற்கும் அதனை நீண்டகாலம் வைத்துப் பயன்படுத்துவதற்கும் வாய்ப்பு ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கட்டட நிர்மாண வேலை நடைபெற்று வருவதால் அடுத்த வருடத் தொடக்கத்தில் போத்தலில் கள்ளை அடைக்கும் செயற்பாடுகள் ஆரம்பமாகும் எனக் கூறப்படுகின்றது. (3-111)

## சித்திரமும் வடிவமைப்பும் எழுத்துப் பரீட்சை நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் பாடநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களின் விண்ணப்பங்களில் இருந்து தகுதி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான செய்முறை எழுத்துப் பரீட்சை ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு நடைபெறும் என யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

சித்திரமும் வடிவமைப்பும் பாடநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களில் அனுமதிப் பரீட்சைக்கு 73 மாணவர்கள் தகுதிபெற்றுள்ளனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (3-12)

## அபிவிருத்தி குறித்து ஆராய்வு

தென்மராட்சி,டிசெ.9

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறும்.

வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் சபை உறுப்பினர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (3-117)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யங்கென்றீசியன் விளையாட்டுக் கழகம் மாவட்டமட்டத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்றும் நாளையும் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* இன்று பி.ப. 3.30 மணி - ஆனைக்கோட்டை யூனியன் வி.க. எதிர் தாவடி ஜீகாரியம்பாள் வி.க., பிற்பகல் 4.30 மணி - ஊரெழு றோயல் வி.க. எதிர் அராலி ஜேம்ஸ் வி.க.
* நாளை பிற்பகல் 3.30 மணி - உடுப்பிட்டி ஜீவகன் வி.க. எதிர் மாதகல் சென். தோமஸ் இளைஞர் வி.க. (மஞ்சள்), பிற்பகல் 4.30 மணி- குருநகர் சென்.ரோக்ஸ் வி.க. எதிர் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் வி.க. (3-190)

## பாதுகாப்புச் செயலர் - இந்தியத் தூதர் ஒருமணி நேரம் மந்திராலோசனை

கொழும்பு,டிசெ.9

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் கடந்த திங்களன்று திடீரென பாதுகாப்பு அமைச்சுக்குச் சென்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவுடன் சுமார் ஒருமணி நேரம் மந்திராலோசனை நடத்தினார்.

சம்பிரதாய முறைக்கு மாறாக தூதுவர், பாதுகாப்பு அமைச்சுக்குச் சென்று அதன் செயலாளரைச் சந்தித்தமை குறித்து பல வட்டாரங்களிலும் வியப்புத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது நாட்டில் எழுந்துள்ள நெருக்கடி நிலைமைகளை அடுத்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும், அவரின் மிகநெருங்கிய பாதுகாப்பு ஆலோசகருமான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ இந்தியத் தூதரை அவசரமாக அழைத்துப் பேசிய விடயம் குறிப்பிடத்தக்கதாகின்றது.

சில முக்கிய உதவிகளை இலங்கை அரசின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலர், இந்தியத்தரப்பிடம் இச்சந்திப்பின் போது கோரினார் என்றும் -

அது குறித்து புதுடில்லி அரசுத் தலைமைக்குத் தெரியப்படுத்தி உரிய பதிலைத் தாம் பெற்றுத்தருவார் என இந்தியத் தூதுவர் பதிலளித்தார் என்றும் - தெரியவந்தது. (எ-க)

## சுந்தரராமசாமியின் நினைவாக யாழ்.பல்கலையில் அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.9

படைப்பாளியும் விமர்சகருமான சுந்தர ராமசாமியின் நினைவு அஞ்சலிக் கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நினைவுரைகளை கலாநிதி ம.இரகுநாதன், எழுத்தாளர்களான க.சட்ட நாதன், அ.யேசுராசா ஆகியோர் நிகழ்த்தினர். படைப்பாளி சுந்தரராமசாமி தொடர்பான விரிவான விடயங்கள் நினைவுரைகளில் விளக்கமளிக்கப்பட்டன.

நிறைவில் நன்றியுரையினை விரிவுரையாளர் க.அருந்தாகரன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-12)

## நீர்வேலி தெற்குப் பகுதியில் காட்டுப்பன்றிகள் தொல்லை

### விவசாயிகள் பெரும்பாதிப்பு

அரியாலை,டிசெ.9

நீர்வேலி தெற்குப் பகுதியில் உள்ள விவசாய தோட்டங்களில் காட்டுப் பன்றிகளின் தொல்லை அதிகரித்திருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தோட்டங்களில் பயிரிடப்பட்டிருக்கும் கறணை மற்றும் இராசவள்ளி கிழங்குகளை பன்றிகள் கிழறித்தின்று சேதப்படுத்திவிட்டு செல்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காட்டுப்பன்றிகள் எங்கிருந்து இந்தப் பகுதிக்கு வந்தன என்பது பற்றி புரியாமல் இருப்பதாக அப்பகுதி விவசாயிகள் மேலும் தெரிவித்தனர். (3-17)

## உலக மகா பணக்காரர் இலங்கைக்கு வருகிறார்

### ஒரு மணித்தியாலத்துக்கு மட்டுமே அவரது விஜயம்

கொழும்பு,டிசெ.9

உலகிலேயே முதலாவது பணக்காரர் என்ற பெயரைப் பல ஆண்டு காலமாகத் தக்க வைத்துக்கொண்டுள்ளவரும் உலகப் பிரசித்தி பெற்ற ''மைக்ரோ சொவ்ட்'' நிறுவனத்தின் உரிமையாளருமான பில்கேட்ஸ் இன்று இலங்கைக்கு வருகிறார். இவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர். தனக்குச் சொந்தமான விமானமொன்றில் இலங்கைக்கு வரவிருக்கும் அவர் ஆக ஒரு மணித்தியாலம் மாத்திரமே இங்கு தங்கியிருப்பார்.

அந்த ஒரு மணித்தியாலத்தில் அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்குள்ளதோடு கொழும்பு இசிபத்தன வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ள ஒரு லட்சம் ஆசிரியர்களுக்குக் கணனிப் பயிற்சி வழங்கும் செயற்றிட்டம் தொடர்பான நிகழ்விலும் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-206)

## கிணற்றுக்குள் விஷவாயுக் கசிவு; உள்ளே இறங்கிய மூவர் பலி!

### மேலும் ஆறு பேர் ஆபத்தான நிலையில்

பொலன்னறுவை,டிசெ.9

ஹிங்குராங்கொடவில் கிணறு ஒன்றைச் சுத்திகரித்துக் கொண்டிருந்த தொழிலாளர்களில் மூவர் விஷவாயுத் தாக்கத்தினால் உயிரிழந்திருக்கின்றனர். மேலும் ஆறு பேர் ஆபத்தான நிலையில் பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் 45 அடி ஆழமுள்ள கிணறு ஒன்றைச் சுத்திகரித்துக் கொண்டிருந்தபோது தொழிலாளர்கள் பலர் சுவாசிக்க முடியாது தடுமாறி மயங்கிவீழ்ந்தனர். வைத்தியசாலைக்குக் கொண்டுசென்ற சில மணி நேரத்தில் இவர்களில் மூவர் மரணித்தனர். ஏனையோர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பிரியந்த ராஜபக்ஷ (28 வயது), ஜயந்த சோமம்பேக (23 வயது), சுனில்(25 வயது) ஆகியோரே உயிரிழந்தனர். பொலன்னறுவைப் பொலீஸார் இதுதொடர்பான விசாரணைகளை நடத்திவருகின்றனர். (க-3)

## தொழில்நுட்ப பாடக் கருத்தரங்கு சனியன்று

யாழ்ப்பாணம்,டிசெ.9

தரம் 10 மாணவர்களுக்கான இலவச தகவல் தொழில்நுட்பப் பாடக் கருத்தரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை கோண்டாவில் சி.பி.கணனி நிறுவன விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஓர் அமர்வாகவும் பிற்பகல் 3.30 மணிக்கு மற்றைய அமர்வுமாகவும் நடைபெறும்.

சி.பி. கணனி நிறுவனத்தினால் நடத்தப்படவுள்ள இந்தக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-203)

## நத்தார் கீத நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.9

உடுவில் மகளிர் கல்லூரியின் நத்தார் கீத நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு உடுவில் தேவாலயத்தில் நடைபெறவுள்ளது. (3-202)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீரவாகு கணேசராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (3-203)

## வாடிக்கையாளர் நிலையத் திறப்புவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.9

ஹற்றன் நஷனல் வங்கியின் மானிப்பாய் வாடிக்கையாளர் நிலையத்தின் திறப்பு விழா எதிர்வரும் 14ஆம் திகதி நண்பகல் 12.15 மணியளவில் இடம்பெறவுள்ளது.

வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அந்த நிலையத்தின் முகாமையாளர் கேட்டுள்ளார். (3-203)

# வலி.தென்மேற்குப் பகுதியில் நெற்பயிர்களில் நோய்ப்பாதிப்பு

வலி.தென்மேற்கு,டிசெ.9

வலி.தென்மேற்கு பகுதியில் நெற்பயிர்களை மடிச்சுக்கட்டி நோய் பாதித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வளர்ந்து கதிர்வரும் பருவத்திலுள்ள நெற்பயிர்களில் இந்த நோய் ஏற்பட்டிருப்பதால் பயிர்கள் பழுப்பு நிறமடைந்து வளர்ச்சி பாதிப்புக்குள்ளாவதாகக் கூறப்படுகின்றது.

இந்த நோயைக் கட்டுப்படுத்துவற்கு விவசாயிகள் பலர் கிருமிநாசினியை விசிறி வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை - பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளிலுள்ள நெற்காணிகளில் நண்டுகள் நெற்பயிர்களை வெட்டிச் சேதம் விளைவித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

கதிர்வரும் பருவத்தில் உள்ள நெற்பயிர்களுக்குப் போடப்படும் ரி.டி.எம்.எனப்படும் உரத்திற்கு வலி.தென்மேற்கு பிரதேசத்தில் தட்டுப்பாடு நிலவி வருவதாக இப்பகுதி விவசாயிகள் சம்மேளனங்கள் தெரிவித்துள்ளன.

இதனால், உரிய காலத்தில் ''மேல்கட்டு உரம்'' என்றழைக்கப்படும் இக்கலவை உரத்தை விவசாயிகள் பயன்படுத்த முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - யூரியா உரத்தை 350 ரூபாவாக விலை குறைத்துள்ளதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் யாழ். மாவட்டத்தில் இதுவரை செயற்படுத்தப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இவ்விலை குறைப்பு இங்கும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று விவசாயிகள் கேட்கின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட பெருமழையினால் தாழ்ந்த - பள்ளமான நெற்காணிகளில் வெள்ளம் தொடர்ந்து காணப்படுகின்றது.

வெள்ளம் நிற்கும் போது விவசாயிகள் தமது நெற்காணிகளுக்கு பயிர் வளர்ச்சிக்கான உரங்களைப் பயன்படுத்தி வருவதுடன், களைகளையும் பிடுங்கி வருவதை அவதானிக்க முடிகின்றது.

நெற்காணிகளில் களை பிடுங்குவதற்குப் பெண் விவசாயத்தொழிலாளர்களுக்கு இப்பகுதியில் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இவர்களின் கூலி (சம்பளம்) அதிகரித் துள்ளதாலும் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். (3-135)

## மாணவருக்கு கருத்தரங்கும் ஆசி வழங்கலும்

யாழ்ப்பாணம்,டிசெ.9

இந்தியன் டிசைனிங் நிறுவனம் யாழ். கல்விசார் நிறுவனங்களுடன் இணைந்து ஜி.சீ.ஈ.சாதாரணதர மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்றையும் ஆசி வழங்கும் நிகழ்வையும் நடத்தவுள்ளது.

இந்நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் கொழும்பு, யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கல்லூரிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் இணைந்து நடத்தும் கருத்தரங்கும் சமயப் பெரியார்கள், கல்லூரி அதிபர்களின் ஆசி வழங்கலும் இடம்பெறும். (3-202)

## தென்மராட்சியில் 9 பாடசாலைகளை சிறுவர் பாதுகாப்பு நிதியம் புனரமைக்கும்

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஒன்பது பாடசாலைகளும் இரண்டு முன்பள்ளிகளும் சிறுவர் பாதுகாப்பு நிதி நிறுவனத்தினரால் புனரமைக்கப்படவுள்ளன.

இவற்றில் அத்தியாவசிய தேவைகள் இனங்காணப்பட்டு தலா இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் உடடினயாகத் தேவைகள் பூர்த்திசெய்யப்படவுள்ளன.

குடமியன் அ.த.க. பாடசாலை, கொடிகாமம் அ.த.க. பாடசாலை, அல்லாரை அ.த.க. பாடசாலை, கரம்பை அ.மி.த.க. பாடசாலை, வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம், மந்துவில் றோ.க.த.க. பாடசாலை, மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம், நாவற்குழி மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம் ஆகியவையும் நாவற்குழி சிவமணி முன்பள்ளி, கலைவாணி முன்பள்ளி ஆகியவையும் நிறுவனத்தினரால் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-117)




சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கச்சாய் அ.த.க.பாடசாலையில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ பரிசோதனை முகாமில் கலந்துகொண்ட ஒருவருக்கு, கண்சிகிச்சை நிபுணர் டாக்டர் க.குகதாஸன் பரிசோதனை மேற்கொள்வதைப் படத்தில் காணலாம்.
(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)

# புதிய வாக்காளர் இடாப்பு தயாரிக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்.தேர்தல் மாவட்டத்தின் 2005 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புத் தயாரிக்கும் பணியில் யாழ்.தேர்தல் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் கருத்துத் தெரிவிக்கையில்:-

வாக்காளர் இடாப்பின் ஏ, பி பட்டியல்கள் தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. அடுத்த மாதம் 3 ஆம் திகதி முதல் பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், கிராம சேவகர் அலுவலகங்கள் என்பவற்றில் இப்பட்டியல்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

இப்பட்டியல் தொடர்பில் ஆட்சேபனைகள் இருந்தால் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்கவேண்டும். முதலாவது அறிவித்தல் அடுத்த மாதம் 17 ஆம் திகதியும் இரண்டாவது அறிவித்தல் அடுத்த மாதம் 31 ஆம் திகதியும் விடுவிக்கப்படும்.

இரண்டாவது ஆட்சேபனைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்கப்படவேண்டும்.
(3-202-204)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

# சேர் பொன். இராமநாதனின் குருபூசை சிறப்பாக நடைபெற்றது

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ். பல்கலைக்கழக நிறுவுநர் சேர் பொன். இராமநாதனின் நினைவு தின குருபூசை நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை காலை தொடக்கம் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றன.

யாழ். பல்கலைக்கழக இந்துமன்றத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்நிகழ்வில் முதற்கட்டமாக யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் 108 சங்காபிஷேகம் நடத்தப்பட்டது.

அதனை அடுத்து மங்கள வாத்தியங்கள் சகிதம் துணைவேந்தர் தலைமையில் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இராமநாதனின் சிலை அமைந்துள்ள பகுதிக்கு அழைத்துவரப்பட்டனர். அங்கு இராமநாதனின் சிலைக்கு அஞ்சலி செய்யப்பட்டது. உருவச்சிலைக்கான மலர்மாலையை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் அணிவித்தார்.

தொடர்ந்து முற்பகல் 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக சபா மண்டபத்தில் இந்துமன்றத் தலைவர் சு.சுரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இராமநாதனின் உருவப்படத்திற்கான மலர்மாலையை துணைவேந்தர் அணிவித்தார்.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனத்தின் சிவாச்சாரிய குருகுல மாணவர்களின் வேதபாராயணம், திருமுறைப்பாராயணம் ஆகியவற்றுடன் குருபூசை நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயப் பிரதம சிவசாரியாரும் நிகழ்த்தினர்.

இராமநாதன் நினைவுரைகளைத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், பரமேஸ்வராக் கல்லூரியின் ஆளுநர் சபைத் தலைவர் திருமதி மங்கயர்கரசி திருச்சிற்றம்பலம், ஆளுநர் சபையின் செயலாளர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி க.கந்தசாமி, கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், வணிக முகாமைத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர், யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர். (த-12)

# மெல்லக் கற்கும் மாணவரின் கல்வியை உயர்த்தத் திட்டம்

## பாடசாலைகளில் தரம் 3 வகுப்பில்

குடாநாட்டுப் பாடசாலைகளில் தரம் மூன்றில் கல்வி கற்கும் கல்வியில் பின்தங்கிய மாணவர்களை அதாவது, மெல்லக் கற்கும் மாணவர்களது கல்வி அடைவை உயர்த்துவதற்கான திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

தென்மராட்சி வலயத்தில் இத்திட்டத்தைப் பொது நலவாயக் கல்வி நிதியத்தின் நிதி உதவியுடன் அறவழி நிலையம் செயற்படுத்தவுள்ளது. இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த சுமார் 5 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அறவழி நிலையச் செயலாளர் க.ஜீவகதாஸ் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்காகத் தென்மராட்சி வலயத்தில் 20 பகுதிநேர ஆரம்ப ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன. இத்திட்டம் பரீட்சார்த்தமாக 6 மாத காலத்திற்குச் செயற்படுத்தப்படும் எனவும் பின்னர் மாணவர்களது திறனைக் கருத்தில் கொண்டு மேலும் விரிவுபடுத்தப்படும் எனவும் -

இத்திட்டத்திற்குப் பொறுப்பாளர்களாக தென்மராட்சியில் ஒய்வுபெற்ற அதிபர் க.தம்பிமுத்து, கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த திருமதி இராசம்மா ஆகியோர் செயற்படவுள்ளனர்.

இத்திட்டங்களை ஏனைய சகல வலயங்களிலும் முன்னெடுக்க ஒவ்வொரு வலயங்களிலும் ஒவ்வொரு அரசசார்பற்ற நிறுவனங்கள் பங்களிப்புச் செய்ய முன்வந்துள்ளன.

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு 'ஊற்று' நிறுவனமும் தீவக வலயத்தில் 'கியூடெக்' நிறுவனமும் வலிகாமம் வலயத்தில் 'பால்நிலைக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பும்' யாழ். வலயத்தில் 'அகதிகள் புனர்வாழ்வுக்கழகமும்' தென்மராட்சி வலயத்தில் 'அறவழி நிலையமும்' இத்திட்டத்துக்கான நிதியுதவியை வழங்கவுள்ளன. (த-31)

# நீர்வேலியில் தொடர்ந்தும் பதற்றம்

அரியாலை,டிசெ.9

நீர்வேலிப் பகுதியில் தொடர்ந்தும் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகின்றது.

குறிப்பாக, பருத்தித்துறை வீதியில் - கோப்பாய் சந்திக்கும் நீர்வேலிக்கு இடைப்பட்ட பகுதியில் இவ்வாறு தொடர்ந்தும் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகின்றது.

அத்துடன், இப்பகுதி மக்கள் பீதியடைந்து இருப்பதை அவதானிக்க முடிந்தது. இந்தப்பகுதியில் இராணுவத்தினரின் ரோந்தும் அதிகரித்துள்ளது. (எ-17)



வட்டுக்கோட்டை காந்திஜி சனசமூக நிலைய எல்லைக்குட்பட்ட சிந்துபுரத்தில் தமிழீழ மாவீரர் தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் கலந்துகொண்ட மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் சுடரேற்றுவதையும் மூத்த பிரமுகர் ஒருவர் நினைவுரை ஆற்றுவதையும் படங்களில் காணலாம். (த-12)

# யுத்தம் மூண்டால் அரசே பொறுப்பு!

## சாடுகிறது ஐ.தே.க.

கொழும்பு, டிச.8

நாட்டிலே மீண்டும் ஒருமுறை யுத்தம் ஏற்படும் அபாயம் தென்படுகிறது. அது வடக்குக்-கிழக்குக்கு மாத்திரம் மட்டுப்படுத் தப்படாமல் இலங்கை முழுவதற்கும் விஸ் தரிக்கப்படும் சூழ்நிலையும் உருவாகலாம் என அஞ்சப்படுகிறது. அவ்வாறானதொரு நிலை உருவானால் அதற்கு இந்த அரசே பொறுப்புக்கூற வேண்டும்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் கொழும் பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவல கத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐ.தே.கவின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

தற்போது வடக்கு-கிழக்கில் இடம்பெறு வரும் அசம்பாவிதங்களை வைத்துப் பார்க்கும் போது, நாட்டில் மீண்டும் ஒருமுறை யுத்தம் ஏற்படக்கூடிய சூழ்நிலையே உருவாகி வருகின் றது என்பது புலனாகின்றது. அவ்வாறு ஏற் பட்டால் அது முழு நாட்டையும் பாதிக்கும்.

அரசு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடை முறைப்படுத்தாமலும் சமாதானப் பேச்சுகளை உடனடியாகத் தொடங்காமல் காலந்தாழ்த்து வதுமே இந்த நிலைக்குக் காரணம்.

சமாதானப் பேச்சைத் தொடங்குவதா, இல்லையா என்ற ஒரு சரியான நிலைப்பாட் டிற்கு ஜனாதிபதி மஹிந்த இன்னும் வரவில்லை.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் அதில் உள்ள குறைபாடு கள் களையப்படவேண்டும் என்றும் அரசு கூறுகின்றது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அரசு புலிகளு டன் சேர்ந்து மீள்பரிசீலனை செய்யலாம். ஆனால், அதை ஏற்படுத்திய எம்மீது குற்றம் சுமத்துவ தையோ அல்லது அதில் குறைபாடுகள் உள் ளன என்று கூறப்படுவதையோ எம்மால் ஏற்க முடியாது. அந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் மூலம் தான் ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற் றப்பட்டுள்ளன.

நாட்டைப் புலிகளிடம் பிரித்துக்கொடுப்ப தற்காக 'யானை - புலி' ஒப்பந்தம் செய்யப் பட்டிருப்பதாக ஜே.வி.பி. கூறிவந்தது. ஆனால், ஜே.வி.பியிடம் புலிகளும் சிவப்பு - புலி' ஒப் பந்தம் செய்து கொண்டிருப்பதாகவே இப் போது தெரியவருகிறது.

வடக்கு-கிழக்கில் இடம்பெறும் அசம்பாவி தங்கள் இதனையே தெளிவுபடுத்துகிறது. இப் போது வடக்கில் மாத்திரமின்றி கிழக்கிலும் அசம்பாவிதங்கள் இடம்பெற்று வருகின்றன.

கிழக்கில் இனமுறுகல் ஏற்படும் நிலை தென்பட்டுள்ளது. அங்குள்ள முஸ்லிம் மக் களுக்குப் பாதுகாப்பில்லை. ஜனாதிபதி உடனடியாக கிழக்கில் பாதுகாப்பைப் பலப் படுத்தவேண்டும். சமாதானப் பேச்சை உடனடி யாக ஆரம்பிக்க வேண்டும். இல்லையேல் இப் போதுள்ள வடக்கு - கிழக்கு நிலைமை நாடு தழுவிய யுத்தமாக மாறவாய்ப்புண்டு.

உரிய முறையில் சமாதான முன்னெடுப்பு களை அரசு மேற்கொண்டால் இந்த நாட்டின் நலன்கருதி நாம் அரசுக்கு ஆதரவு வழங்கவும் தயார். - இவ்வாறு அவர் கூறினார். (க)

## 81 கடைகளின் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிப்பு

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக 81 கடைகளின் உரிமை யாளர்களுக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் ஒருலட்சத்து 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

புறக்கோட்டையிலுள்ள பிரபல புடவைக் கடைகள் உட்பட பல்வேறு வியாபார நிலை யங்களில் பாவனையாளர் பாதுகாப்பு அதி காரசபையின் அதிகாரிகள் நேற்று திடீர்த் தேடுதலொன்றை நடத்தினர். அப்போது உரிய விலைப்பட்டியல் குறிப்பிடப்படாமல் பல பொருள்கள் விற்பனைக்காக வைக்கப் பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து கொழும்பு நீதிவான் நீதி மன்றத்தில் மேலதிக நீதிவான் எல்.லியனா ராய்ச்சி இந்த கடை உரிமையாளர்களுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா அபராதத்தை விதித்தார். நேற்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகாத கடை உரிமையாளர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (க)

# உள்ளூர் மட்டத்தில் இராணுவ-புலித் தலைமைகள் நிலைமையைத் தணிக்க நேரடியாகப் பேசவேண்டும்

## யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு கோரிக்கை

கொழும்பு, டிச.8

வட.-கிழக்கில் நடைபெற்றுவரும் தாக்குதல் சம்பவங்களை ஒோலைத்தனமான செயல்கள் என்று வன்மையாகக் கண்டித்துள்ள சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, வன்முறைகள் பெருகிப் போவதைத் தடுத்து கட்டுப்படுத்துவதற்கு முன்னோடியாக உள் ளூர் மட்ட இராணுவத் தலைமையும், விடு தலைப் புலிகளும் சந்தித்து நேரடிப் பேச்சுக் கான மார்க்கங்களைத் தீர்க்க முன் வரவேண் டும் என்றும் கோரியிருக்கிறது.

நடந்துவரும் இராணுவ, சிவிலியன் கொலைகள் முழுச் சமாதான முன்னெடுப்பு களுக்குமே பெரும் அச்சுறுத்தலாகியுள்ளது. இது கட்டுமீறிப் போகாமைக்கு படையினர் கடைபிடித்து வரும் பொறுமையுடனான செயற்பாடேயாகும். எனவே, இங்கு தோன்றி யுள்ள நிலைமைகளைத் தணிப்பதற்கு வேண் டிய சகல நடவடிக்கைகளையும், இரு தரப்பின ரும் நேரடிப் பேச்சுகள் மூலம் எடுக்க முன்வர வேண்டும் என்றும் கண்காணிப்புக் குழு கோரி யுள்ளது.

வடக்கு-கிழக்கில் தோன்றியுள்ள இந் நிலைமையை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கும், சமாதானப் பேச்சை ஆரம்பிப் பதற்கான முன்னெடுப்புகளை ஆரம்பிப்பதற் கும் சர்வதேச சமூகம் தனது செல்வாக்கைப் பயன்படுத்த முன்வர வேண்டும் என்றும் குழு தெரிவித்துள்ளது.

நிலைமையை தணிப்பதற்கு வேண்டிய தன்னாலான சகல நடவடிக்கைகளையும் கண் காணிப்புக்குழு முன்னெடுக்கும் என்றும் தெரி விக்கப்படுகிறது.

கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ருப் ஹொக்லண்ட், இது தொடர்பாக நீண்ட அறிக்கை ஒன் றையும் விடுத்திருக் கிறார்.

அவர் தெரிவிப்ப தாவது:-

"யாழ். குடாநாட் டில் சமீப நாள்களா கப் பெருகிவரும் வன்செயல் சம்பவங் கள் கவலையளிப் பன வாய் இருக்கின்றன. இந்த வன்செயல்கள் காரணமாக பல படை வீரர்களும், சிவிலி யன்களும் கொல்லப் பட்டுள்ளனர்; பலர் காயமடைந்து முள்ள னர். பெருகிவரும் வன்செயல்கள் இன் னமும் கட்டுப்பாடு களை மீறிப் போக வில்லை. கடும் சோத னையான நிலைமை களுக்கு மத்தியிலும் ஸ்ரீலங்காப் படையி னர் மிகப் பொறுமை யுடன் அடக்கமாகச் செயலாற்றி வருவதே காரணமாகும். இதற் காக நாங்கள் படையி னரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

வன்செயல்களின் அதிகரிப்பும் யுத்த நிறுத்தத்துக்கு அச் சுறுத்தலாகவே இருந்து வருகிறது. அத்தோடு, சமாதான முன்னெடுப்புகள் முழு மைக்கும் பேராபத் தைத் தரக் கூடியதாக இருக்கிறது.

எனவே, இது விஷயத்தில் சர்வ தேச சமூகமும் தனது செல்வாக்கை இரு தரப்பினர் மத்தியிலும் பயன்படுத்தி சமாதா னப் பேச்சுகள் மீண் டும் ஆரம்பமாவதற் கான மார்க்கங்களைத் திறக்கும்படி செய்ய வேண்டும். (க)


## மூன்றாம் வருட நினைவில்

மண்ணில் 25 - 11 - 1923

விண்ணில் 13 - 12 - 2002



அமரர் கந்தையா சுப்பையா

(இளைப்பாறிய அதிபர், யா/அளவெட்டி றோ.க.த.க. பாடசாலை)

திதி: 09-12-2005

இல்லறம் என்னும் இனிய பூங்காவில்
நல்லறம் பேணி வாழ்ந்து வழிகாட்டிய - எம்
அன்புத் தெய்வத்திற்கு எம் மனமாற
பிரார்த்திக்கின்றோம்.

க.நாகம்மா
பிள்ளையார் வீதி,
அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

உங்கள் ஆத்ம சாந்திக்காக
நித்தமும் இறைவனைப் பிரார்த்திக்கும் ...
குடும்பத்தினர்.

(சு/46686)(23-46)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1933 - 03 - 03

மறைவு 2005 - 11 - 09



அமரர் ஆறுமுகம் கந்தசாமி

(ஆலடி, களபூமி, காரைநகர்)

அப்பா என்று இனி அழைக்க
யார் அப்பா எங்களுக்கு!

எமது அன்புத் தந்தை தெய்வமாகி முப்பத்தொரு நாள்கள் மறைந்தா லும் எங்கள் அன்பும் பாசநினைவுகளும் என்றும் மறையாது. எம் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (09.12.2005) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி ஏகதின டம், சபிண்டிகரணக்கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின் றோம்.

இல.26, உருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தை,
கொழும்பு.
(43738)(21-26-45)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.






## UDUVIL GIRLS' COLLEGE

*Primary Department*
*Presents*

### Kids - on - Stage

**Annual Christmas Entertainment**

**on**

**Saturday, December 10, 2005, 9.30 A.M.**

**At**

**The College Hall**

(C/46673)

# ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்றால் ஐக்கிய இலங்கை இல்லாமல் போய்விடும்

## இரு தேசங்கள் உருவாகும் என்கிறார் சம்பந்தன்

அதிதீவிர இனவாதக் கட்சிகளின் ஆதரவுடன் ஜனாதிபதியாக வந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வுகாணும் பொறுப்பில் இருந்து விலகிவிடமுடியாது.

ஒற்றை ஆட்சியின் கீழ்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என ஜனாதிபதி கருதுவாரேயானால் ஐக்கிய இலங்கை காணாமற்போய் விடும். இங்கு இரு தேசங்கள் உருவாவதை எவராலும் தடுத்து நிறுத்தமுடியாது.

- இப்படித் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சூளுரைத்தார்.

ஜனாதிபதியின் கொள்கைவிளக்க உரை மீதான விவாதத்தை ஆரம்பித்துப் பேசிய இரா.சம்பந்தன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

அண்மையில் கொல்லப்பட்டவர்கள் குண்டுகளின் சன்னங்களால் கொல்லப்படவில்லை. சமாதானத்தைத் தோற்றுவிக்க முடியாத ஓர் அவல சூழ்நிலையே அவர்களைக் கொன்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நெருக்கடிநிலை, அரசியல் முரண்பாடுகள் தொடர்பாகப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர்தின உரையில் தெளிவாகச் சுட்டிக்காட்டி உள்ளார். ஜனாதிபதியிடம் நியாயமான தீர்வு ஒன்றைத் தாம் எதிர்பார்க்கின்றார் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவருடைய உரைக்கு இந்த அரசின் பதில் என்ன?

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பொதுக்கட்டமைப்பு ஒன்றை வழங்க மறுக்கும் இவர்களால், தமிழ் மக்களுக்கு எந்த விதமான நேர்மையான தீர்வையும் வழங்க முடியாது.

1931ஆம் ஆண்டு டொனமூர் அரசமைப்பு உருவாக்கப்பட்டபோது, தமிழ் மக்களால் ஆரம்பிக்கப்பட்ட சுயநிர்ணய உரிமைப் போராட்டம் மஹிந்த ராஜபக்ஷ காலம்வரை வந்துவிட்டது. ஆனால், தமிழர்களின் அபிலாஷைகள் இன்றுவரை எட்டமுடியாத ஒன்றாகவே இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் 99.5 ஆக இருந்த தமிழ் மக்களின் இன விகிதாசாரம் திட்டமிட்ட குடியேற்றத்தால் அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இப்படியே தமிழர்களுக்கு எதிரான பல திட்டங்கள் மூலம் சிங்கள அரசுகளால் தமிழர்கள் திட்டமிட்டே பழிவாங்கப்பட்டு வந்துள்ளனர்.

டொனமூர் அரசமைப்பு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யவில்லை. இதன் அடிப்படையில் நடைபெற்ற முதலாவது தேர்தலை யாழ்ப்பாணத்து இளைஞர்கள் அப்போதே பகிஷ்கரித்தனர். அதே நிலைமைதான் இன்றும் ஏற்பட்டுள்ளது.

தமிழ் மொழி அரசகரும மொழி என்பது பெயரளவில் மட்டுமே. ஆனால், தமிழ் மக்களின் பூர்வீக இடமான வடக்கு- கிழக்கில் கூட தமிழ் மொழியை அரசகரும மொழியாக்க இந்த அரசினால் முடிய்வில்லை.

இனப்பிரச்சினை விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீல.சு.கட்சியும் ஒரே போக்குடையவை.

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக வந்த சந்திரிகா குமாரதுங்க சமஷ்டி முறையில் தீர்வு காண்பார் எனக்கூறினார். அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அதனை ஆதரித்தார். ஐ.தே.கவும் அதனை ஆதரித்தது.



அதே மஹிந்த ராஜபக்ஷ இப்பொழுது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியானவுடன் ஒற்றையாட்சி முறையில்தான் தீர்வு என்கிறார். இதனை ஜனாதிபதி தேர்தல் மேடைகளிலேயே மஹிந்த ராஜபக்ஷ கூறிவிட்டார்.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்க தமிழர்கள் விடயத்தில் சற்று நேர்மையாக செயல்பட்டிருந்தால் அவர்தான் இன்று ஜனாதிபதியாக இருப்பார். இதனைப் பதவியில் இருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஒரு பாடமாகக் கொள்ளவேண்டும். - எனவும் இரா.சம்பந்தன் கூறினார். (க-3)

# முஸ்லிம்களைக் கொல்வோரைப் பிடித்து சட்டத்தின் முன் புலிகள் நிறுத்தவேண்டும்

## சபையில் ரவூப் ஹக்கீம் கோரிக்கை



ஜனாதிபதித் தேர்தல் முடிந்தபின் இதுவரை கிழக்கு மாகாணத்தில் 14 முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர். இக்கொலைகளுடன் தமக்கு எவ்விதமான தொடர்பும் இல்லை எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் கூறுவது உண்மையானால், இக்கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த புலிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று ஸ்ரீ ல.மு.காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றில் சவால் விடுத்தார்.

நேற்றுமுன்தினம் காலை நாடாளுமன்றம் கூடிய வேளையில் சபாநாயகரின் அனுமதியுடன் விசேட கூற்று ஒன்றை வெளியிட்டு அவர் பேசினார்.

அப்போது ரவூப் ஹக்கீம் மேலும் கூறியதாவது:-

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் படுகொலைகளைப் புலிகளே செய்துவருகின்றனர் என அப்பிரதேசங்களில் வாழும் மக்கள் கூறுகின்றனர். ஆனால், புலிகள் தமக்கு இதில் தொடர்புகள் இல்லை என்று கூறுகின்றனர். புலிகளின் கூற்று உண்மையானால் கொலையாளிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும். தமிழ் - முஸ்லிம் மக்களிடையே முறுகல் நிலை அதிகரிக்குமானால் இரு சிறுபான்மை சமூகங்கள் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தேடமுடியாது.

இன்று வடக்கு - கிழக்கில் மட்டும் அல்ல தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில தீய சக்திகள் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் மோதல்களை உருவாக்க தூபம் இடுகின்றன. இதற்கு நாம் துணைபோய் விடாமல் விழிப்புடன் செயற்படவேண்டும்.

நாட்டுமக்களின் முழுப்பாதுகாப்புக்கும் பொறுப்பான ஜனாதிபதி, ஆயுதமற்ற முஸ்லிம் மக்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெறும் கொலைகளுக்கு அரசும் பொறுப்பேற்க வேண்டும். இந்தப் பொறுப்புகளில் இருந்து அரசாங்கம் விலகிச் செல்லமுடியாது.

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினர் கொலை செய்யப்பட்டுள்ளமை மூடி மறைக்க முடியாத ஓர் இராணுவ நடவடிக்கையாகும். வடக்கு - கிழக்கில் குழப்ப நிலையை உருவாக்கும் முயற்சி இது. எனவே, இப்பிரதேசங்களில் ஆயுதக் குழுக்களை அனுமதிக்கக் கூடாது.

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை அரசு விலைபேசக் கூடாது எனக் கேட்டுக்கொள்ளும் நாம் 2002ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், ஸ்ரீல.மு. காங்கிரஸுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உடனடியாக அமுல்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறோம் - எனவும் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்துப்பேசிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ஸ, போர் நிறுத்த உடன்படிக்கையைப் புலிகள் தமது கவசமாக வைத்துக்கொண்டு, தமது ஆயுதபலத்தை அதிகரித்துள்ளனர் என்பதை யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் படையினர் மீதான தாக்குதல்கள் உறுதிப்படுத்தி உள்ளன. வடக்கிலும், கிழக்கிலும் இடம்பெற்றுவரும் புலிகளின் தாக்குதல்களை முறியடிப்பதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் - என்றார். (க-3)




# நாட்டில் மீண்டும் 1983 இன் அனுபவம் ஏற்பட விடுதலைப் புலிகள் காரணமாகிவிடக்கூடாது

## எச்சரிக்கிறா்ர் அமைச்சர் டியூ.குணசேகர

தென்பகுதி மக்களுக்கு ஆத்திரம் ஊட்டும் நடடிக்கைகளைத் தமிழீழ விடுதலைப் புலிகள் உடனடியாக நிறுத்தவேண்டும். 1983ஆம் ஆண்டில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்கள் மீண்டும் இந்த நாட்டில் இடம்பெறுவதற்குப் புலிகள் காரணிகளாகி விடக்கூடாது என அரசியல் விவகார அமைச்சர் டியூ.குணசேகர நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பான ஒத்திவைப்பு வேளை பிரேரணையின் மீது உரையாற்றும் போதே அமைச்சர் டியூ. குணசேகர இதனைத் தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் டியூ. குணசேகர மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்நாட்டில் சிக்கலான இனப்பிரச்சினை ஒன்று உண்டு என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதற்கு அரசியல் தீர்வு ஒன்று தேவை. அதனைப் பேச்சு மூலம் ஏற்படுத்த முடியும் என்பதில் அவர் உறுதியாக இருக்கின்றார்.

ஜனாதிபதி, யுத்தம் ஒன்று ஏற்படுவதை சிறிதும் விரும்பாதவர். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதில்தான் ஆர்வம் கொண்டுள்ளார்.

இதனை ஜனாதிபதி தனது பதவி ஏற்பு வைபவத்தின் போதும், கொள்கை விளக்க உரையின் போதும் தெளிவாகக் கூறியுள்ளார்.

இதுவரை காலமும் ஆட்சி செய்த எந்த ஒரு ஜனாதிபதியும் நினைத்துக்கூடப் பார்க்காத வகையில் தான் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நேரடியாகப் பேசத் தயார் எனத் தேர்தல் மேடைகளிலும் வெளிப்படையாகக் கூறியுள்ளார் அவர்.

கடந்த அரசின் போது ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுகள் நடைபெற்றபோதும் அங்கு காணப்பட்ட இணக்கப்பாடுகள் நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. காரணம் அதில் காணப்பட்ட சில சிக்கல்கள்.

இப்படியான சிக்கல்களைத் தீர்க்கத் தென்பகுதி அரசியல் கட்சிகளுடன் பேச்சுகளை நடத்தி ஓர் இனக்கப்பாட்டை ஏற்படுத்திய பின்னரே புலிகளுடன் பேச வேண்டும். அப்போதுதான் ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்த முடியும் என ஜனாதிபதி நம்புகின்றார்.

இதன் அடிப்படையிலேயே அரசியல் கட்சிகளின் மாநாட்டைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகின்றார். ஜனாதிபதியின் அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டணியினர் நிராகரிக்கக் கூடாது. கூட்டமைப்பினர் உணர்ச்சிகளுக்கு மட்டும் இடமளித்து செயல்பட்டால் அது ஆரோக்கியமாக இருக்காது.

வடக்கு-கிழக்கில் இன்று நேற்றுத்தான் கொலைகள் இடம்பெறுகின்றன என்று கூறமுடியாது. யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட கடந்த மூன்று வருடங்களாகவே இப்படியான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றே வந்துள்ளன.

இப்படியான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற அனுமதிக்கக் கூடாது.

மஹிந்த ராஜபக்ஷ 18 ஆம் திகதி ஜனாதிபதியாகப் பதவி ஏற்றவுடன் நாட்டில் யுத்தம் வெடிக்கும் என்று எதிர்பார்த்தனர். அது ஏமாற்றமாகி விட்டது.

ஜனாதிபதி சமாதானத்தில் நம்பிக்கை கொண்டவர். சமாதானத்தை ஏற்படுத்துவார் என்ற நம்பிக்கையுடன் அவருக்கு ஆதரவளிக்க வேண்டும். - எனவும் அமைச்சர் டியூ. குணசேகர கூறினார்.

(க-3)

# யுத்தநிறுத்த உடன்படிக்கையை ஒருதலைப்பட்சமாக மாற்றமுனைந்தால் முறிவது தவிர்க்க முடியாததாகிவிடும்

## எச்சரிக்கின்றார் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்



கொழும்பு,டிசெ.9

யுத்த நிறுத்த உடன்படிக்கையை ஒருபிரிவினர் தன்னிச்சையாக மாற்றி அமைக்க முற்படுவார்களேயானால், இயல்பாகவே மறுபிரிவினர் அதனை முறித்துக் கொள்வதைத் தவிர்க்க முடியாதது ஆகிவிடும். இதனால் விபரீதமான பின்விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைமீதான ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார்.

ஜனாதிபதி தேர்தலின் பின் அரசியல் வட்டாரங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

முன்னைய ஜனாதிபதியினதும் அரசினதும் கொள்கைகளுக்கு விரோதமாகச் செயல்பட்ட ஜே.வி.பியினரும், ஜாதிக ஹெலஉறுமயவினரும் புதிய ஜனாதிபதிக்குப் பக்கபலமாக இருக்கின்றனர். அன்று புலிகளும் - யானையும் இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளனர் என அரச தரப்பினர் ஆரம்பம்முதலே ஐ.தே.க. மீது குற்றம் சுமத்திவந்தனர். ஆனால், புலிகளோ ஐ.தே.க. தம்மைக் கட்டுப்படுத்திவைக்கவே முயற்சித்தனர் என குற்றம் சாட்டுகின்றனர். நாம் நாட்டின் நலன் கருதித்தான் செயற்பட்டோமேயன்றி புலிகளுக்குச் சாதகமாகச் செயற்படவில்லை என்பது இப்பொழுது அனைவராலும் உணரப்பட்டுள்ளது. (09ஆம் பக்கம் பார்க்க)

# ஆறுமுகத்தின் பாதுகாப்பு குறைப்பு பெரும் அரசியல் பழிவாங்கலாகும்

## சீறுகின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க.

கொழும்பு, டிசெ. 9

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு வழங்கப்பட்டுவந்த பாதுகாப்பு குறைக்கப்பட்டமைக்கு ஐ.தே.கட்சி தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. மலையக மக்களின் அமோக ஆதரவைப் பெற்ற ஒரு கட்சியின் தலைவரின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை யானது ஓர் அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் என்றும், உடனடியாக அரசு இவருக்கான பாதுகாப்பை மீள வழங்கவேண்டும் என்றும் ஐ.தே.கவின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததைத் தொடர்ந்து அரசு ஐ.தே.கவின் ஆதரவாளர்களையும், ஆதரவு வழங்கிய கட்சிகளையும் பழிவாங்கத் தொடங்கிவிட்டது. இப்பழிவாங்கல் நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே கட்சித்தலைவர்களின் பாதுகாப்பை அரசு குறைக்கத் தொடங்கியுள்ளது.

அதன் அடிப்படையிலேயே இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் பாதுகாப்பும் குறைக்கப்பட்டுள்ளது. இது அப்பட்டமான அரசியல் பழிவாங்கலாகும். மலையக மக்களின் அதிக செல்வாக்கைப் பெற்ற ஒரு கட்சியின் தலைவரின் பாதுகாப்பு குறைக்கப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எமது ஆட்சிக்காலத்தில் மறைந்த அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு நாம் ஓர் அமைச்சருக்கான பாதுகாப்பை வழங்கி யிருந்தோம். தமிழீழ விடுதலைப் புலிகளால் அவருக்கு அச்சுறுத்தல் இருந்ததால் நாம் அவ்வாறு செய்தோம்.

அவர் எதிர்க்கட்சியில் இருந்தும்கூட நாம் அவரது பாதுகாப்பை உறுதி செய்தோம். அரசியல் ரீதியாகப் பழிவாங்க முயலவில்லை.

ஆனால், இந்த அரசோ மிகவும் கேவலமான முறையில் - வெளிப்படையாக - அரசியல் பழிவாங்கல்களை மேற்கொண்டு வருகின்றது.

இப்போது ஆறுமுகத்தின் பாதுகாப்பு குறைக்கப்பட்டது போல் ஏனைய கட்சித் தலைவர்களின் பாதுகாப்பும் குறைக்கப்படலாம். இந்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்தி, அரசியல் தலைவர்களினதும் இந்த நாட்டு மக்களினதும் பாதுகாப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதிப்படுத்த வேண்டும். - என்றார் அவர். (க-3)

# யுத்த நிறுத்த....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோன்று புலிகளின் தரப்பிலும் மாற்றம் காணப்பட்டுள்ளது. உதவி வழங்கும் சர்வதேச நாடுகளின் அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இப்படியான நிலையில் ஜனாதிபதி மிகவும் அவதானமாக காய் நகர்த்த வேண்டும்.

இப்பொழுது ஜனாதிபதியும், நாடாளுமன்ற நிர்வாகமும் ஒரே கட்சியின் கீழ் இருக்கின்றமை அவருக்கு சாதகமாகவே அமைந்துள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வில் ஜனாதிபதி சிக்கலான ஒருநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். ஆனால், இந்தச் சிக்கலில் இருந்து வெளிப்படவும் பலவழிகள் இருக்கின்றன. அதற்கான அணுகுமுறை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்கப் பேருரை ஒரு தளம்பல் நிலையிலேயே காணப்படுகின்றது.

இனப்பிரச்சினைத்தீர்வுக்கோ அல்லது சமாதான முன்னெடுப்புக்கோ அதில் முன்னுரிமை வழங்கப்படவில்லை.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையின்பின் புலிகள் தரப்பில் ஆற்றப்பட்டுள்ள மூன்று உரைகளையும் மிகவும் அவதானத்துடன் நோக்கவேண்டும்.

முதலாவது - பிரபாகரனின் மாவீரர் தின உரை - இரண்டாவது - லண்டனில் புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தின் பேச்சு. மூன்றாவது - புலிகள் தரப்பில் பாலகுமார் ஆற்றிய உரை. இவை மூன்றும் புலிகள் தரப்பில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை வெளிப்படுத்துகின்றன. இதனை அரசு உதாசீனப்படுத்திவிடக் கூடாது.

ஜனாதிபதி தனது வார்த்தைகளால் மிரட்டக்கூடாது. உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு விடக்கூடாது. உணர்ச்சிகளுக்கு அப்பால் பட்டவராக நின்று செயற்படவேண்டும்.

சமாதானத்திற்கு பேச்சுத்தான் ஒரே வழி என்று கூறும் ஜனாதிபதி, பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெறமுயற்சிக்க வேண்டும்.

நாம் ஆட்சியில் இருக்கும்போது ஆறு சுற்றுச் சமாதானப்பேச்சுகளில் கலந்து கொண்ட அனுபவம் எனக்கு உண்டு.

ஆறு சுற்றுப் பேச்சுகளின் மூலம் ஒரு இணக்கப்பாட்டையும், கட்டமைப்பையும் ஏற்படுத்தி உள்ளோம். அந்தக் கட்டமைப்பை உடைத்து எறிந்துவிட்டு உங்களால் சமாதானத்தை ஏற்படுத்திவிடமுடியாது. மாற்றீடு இன்றி எதையும் உடைத்துவிடக்கூடாது.

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்பது இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று.

இந்திய நிர்வாக முறையை முன் உதாரணமாகக் கொண்டு சமஷ்டி முறையை அமைக்கலாம்.

இதியாவில் சமஷ்டி முறையா அல்லது ஒற்றையாட்சி முறையா என்று திட்டவட்டமாகக் கூறிவிடமுடியாத ஒரு இடைப்பட்ட நிலையே காணப்படுகின்றது. இதை ஒத்ததாக நாமும் ஏற்படுத்தலாம் - எனவும் பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

(க-3)

# அரசுப் பக்கம் 'பல்டி' அடித்தார் இ.தொ.காவின் வடிவேல் சுரேஷ்!

இ.தொ.க.பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நேற்று முன் தினம் அரசின் பக்கம் 'பல்டி' அடித்து ஒட்டிக் கொண்டார். கட்சியின் கட்டுக் கோப்பையும் மீறியே அவர் இப்படித் திடீர் பல்டி அடித்தார் எனத் தெரிய வந்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உப தலைவர்களுள் ஒருவரான இரா.யோகராஜன் நேற்று முன்தினம் நண்பகல் கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத் தினார்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் இ.தொ.கா.நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் 'பல்டி' அடித்து அரசுக்கு ஆதரவு வழங்கமாட் டார்கள் என்று அங்கு அடித்துக் கூறினார் யோகராஜன்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் வடிவேல் சுரேஷ் எம்.பி.யும் கலந்து கொண்டதோடு, யோகராஜனின் கூற்றை ஆமோதித்தார்.

நண்பகலில் இவ்வாறு தலையாட்டிய சுரேஷ் எம்.பி., மாலையில் அதற்கு நேர் மாறாக - குத்துக்கரணம் அடித்து- அரசுடன் ஒட்டிக் கொண்டார்.

அரசுடன் தான் ஏன் சேரவேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை அவரே நாடாளு மன்றத்தில் தெரிவித்தார்.

இ.தொ.காவின் ஸ்தாபகத் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் மாதிரியையே தாம் தொடர்கிறார் எனவும் அவர் கூறினார். நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சுரேஷ் எம்.பி. அங்கே கூறியதாவது:-

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கங்களுக்கு ஆதரவு வழங்கி தோட்ட மக்களுக்குப் பல நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தார். எங்கள் பெரும் தலைவரின் அடிச்சுவட்டில் நாங்களும் இ.தொ.காவில் இருந்து கொண்டே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்திருக்கிறோம்.- என்றார் அவர்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே வடிவேல் சுரேஷ் இப்படிக் கூறினார்.

எமக்கு வாக்களித்த மக்களின் நன்மைக்காக இ.தொ.காவிலும் தேசிய அபிவிருத்திக்காக ஜனாதிபதியின் அரசிலும் பங்கேற்று- ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கரங்களைப் பலப்படுத்தத் தீர்மானித்து விட்டோம் - என்றும் கூறினார்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகள் மத்தியில் வாழ்கின்றனர். ஆனால், சிறுபான்மையினர் என்பதால் அவர்களால் எதையும் தனித்து நின்று வெற்றி கொள்ள முடியாத நிலை.

இதனால்தான், மலையக மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அதிகாரத்தில் இருக்கும் அரசுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

எமக்கு ஆதரவளித்த மக்களின் அழுத்தத்தின் பேரிலேயே நாம் அரசுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

அரசுக்கு ஆதரவு வழங்குகின்றோம் என்பதால் நாம் இ.தொ.காவில் இருந்து வெளியேறிவிட்டதாக அர்த்தம் கொள்ளக் கூடாது. தொடர்ந்தும் இ.தொ.காவுக்குள் இருந்து கொண்டே ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குகிறோம்.- என்றும் வடிவேல் சுரேஷ் எம்.பி.கூறினார். (க-02)


## கருத்தரங்கும் - ஆசி வழங்கலும்

ஐ.டி.சி. மற்றும் கல்விசார் நிறுவனங்களும் இணைந்து நடத்தும் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கருத்தரங்கும் சமயப் பெரியார்கள், கல்லூரி அதிபர்களின் ஆசி வழங்கலும்.

இடம்: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபம்
காலம்: நாளை(10.12.2005 )சனிக்கிழமை காலை 8 மணி
(கணிதம், விஞ்ஞானம்)

கொழும்பு, யாழ்ப்பாணம் பிரபல கல்லூரிகளின் ஆசிரியர்கள் இணைந்து வழங்கும் பரீட்சை வினா எதிர்பார்ப்பும் வினா அணுகுமுறையும் பற்றிய கருத்தரங்கும், சமயப் பெரியார்கள், கல்லூரி அதிபர்களின் ஆசி வழங்கலும் இடம்பெறும்.

சகல மாணவர்களும் கலந்துகொள்ளுங்கள்.
கையேடுகளும் வழங்கப்படும்.

(43648)(21.14.15) ஐ.டி.சி. நிறுவனம்.




## கண்ணீர் அஞ்சலி

**விஜேந்திரன் பிரதீபன்**

யாழ்.மத்திய கல்லூரி மாணவன் விஜேந்திரன் பிரதீபன் அவர்கள் 05.12.2005 திங்கட்கிழமை அகாலமரணம் அடைந்த செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரம் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரத்தியேக வகுப்பு ஆசிரியர், மாணவர்கள்
Business College
முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(43773) (-21-11-45)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 06 1922 மறைவு 13 12 2002



தோற்றம் 25 05 1927 மறைவு 10 12 2002

**திரு திருமதி இராசரத்தினம் அன்னலக்சுமி**

அன்பாகி பண்பாக அவனி போற்ற வாழ்ந்தீர்!
அகிலம் விட்டுச்சென்று ஆண்டு மூன்று ஆயிற்று
ஆனாலும் எம் துயரம் நீங்கவில்லை
அன்புள்ளங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
19, நாவலடி லேன்,
வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம். (43629)(51)


# The Reason for the Season

## A Christmas Musical

*Presented by*

**The Choirs of Uduvil Girls' College**

Friday, December 9, 2005, 4.00 PM

At

The Uduvil Church

(C/46672)


## முதலாவது ஆண்டு சிரார்த்த நாள்

அன்னையின் மடியில் 31 . 05 . 1926



ஆண்டவன் பிடியில் 20 . 11 . 2004

**திருமதி மாணிக்கம் அன்னலட்சுமி**

(திதி: கார்த்திகை பூர்வபக்க நவமி)

ஓராண்டு மறைந்தாலும் உங்கள் நினைவு மட்டும்
எம் நெஞ்சில் மறையவே மறையாது!
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (09.12.2005) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கோயில் குடியிருப்பு,
சாவகச்சேரி. (43723)(51)
குடும்பத்தினர்.

# மீன்பிடி உபகரணங்களை வாங்குவதற்கு வசதிகள் எவையுமின்றி பூநகரி மீனவர்கள்

## தொழில் விருத்திக்கு உதவக் கோருகிறது சங்கம்

பரந்தன்,டிசெ.9

மீன்பிடித் தொழிலுக்கு அவசியமான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய பொருளாதார வசதிகளின்றி பூநகரி மீனவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்று பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரால் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி பள்ளிக்குடா கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 230 மீனவர்கள் அங்கத்தவர்களாகப் பதிவுசெய்துள்ளனர். இம்மீனவர்கள் சாதாரண வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ள மிகக் குறைவான படகுகளிலேயே தமது தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான எந்தவொரு வசதிகளும் இல்லாது இவர்கள் திண்டாடுகின்றனர். இது தொடர்பாக பல தரப்பினரிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை சாதகமான எந்த முடிவும் கிடைக்க வில்லை.

அத்துடன், இப்பகுதி மீனவர்கள் தாம் செய்யும் தொழில் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தமது அன்றாட வாழ்க்கைத் தேவையை நிவர்த்தி செய்து வருகின்றனர். இதனால் தமது தொழிலை விருத்திசெய்து வருமானத்தை அதிகரிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இவர்கள் இருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது.

இம்மீனவர்களின் நன்மை கருதி சம்பந்தப்பட்டவர்கள் அவர்களுக்கு உதவிபுரிய முன்வருவார்களானால் தொழில் விருத்தியை ஏற்படுத்த முடியும் என்று பூநகரி பள்ளிக்குடா கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

(த-6-352)



அண்மையில் ஏற்பட்ட மழை காரணமாக நாகபடுவான் குளத்தின் கலிங்கு நிரம்பி வீதிக்கு நீர் பாய்கிறது. இதனால் இப்பாதையூடாக போக்குவரத்தில் ஈடுபடுவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இந்தக் கலிங்குக் கட்டின் ஊடாகப் பயணம் செய்வோர் மழை வெள்ளத்தினூடாக தமது துவிச்சக்கர வண்டியைத் தூக்கிச் செல்வதைப் படத்தில் காணலாம்.

(படம்:வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# நல்லின நெல் விதைகளை விநியோகிக்க ஏற்பாடு

பரந்தன்,டிசெ.9

கிளிநொச்சி மாவட்டத்தில் சிபார்சு செய்யப்பட்ட திருத்திய நல்லின நெல்வர்க்கங்களை விற்பனை செய்வதற்கு உணவு விவசாய ஸ்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பதிவு செய்யப்பட்டுள்ள பிஜி. 361 சிவப்பு அரிசி, பீ.ஜீ 300 வெள்ளை அரிசி ஆகிய ரக நெல்லினங்களை இம்முறை பெரும்போக நெற்செய்கையின் போது (2005 -2006) பயிரிடுவதன் மூலம் நல்ல விளைவுகளை விவசாயிகளினால் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் -

மேற்படி நெல் இனங்களை விவசாயிகள் கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களங்கள் மற்றும் விற்பனை விதை உற்பத்தி நிலையம் என்பவற்றில் பெற்றுக்கொள்ள முடியும் 'என்றும் -

உணவு விவசாய ஸ்தாபன இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(த-6-352)

# சுகாதார மேம்பாடு குறித்து முழங்காவிலில் செயலமர்வு

வெள்ளாங்குளம்,டிசெ.9

'யுனிசெவ்' நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சுகாதார மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான செயலமர்வு கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி,முழங்காவில் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இச் செயலமர்வில் சுகாதார நடவடிக்கைகள் சம்பந்தமாகவும், அதற்கான தீர்வுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது டன் பாடசாலைகளின் அடிப்படை சுகாதாரத் தேவைகள் குறித்த விவரக் கொத்துகள் பாடசாலை அதிபர்களிடம் வழங்கப்பட்டு விவரங்கள் திரட்டப்பட்டன.

செயலமர்வில் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஜெயசீலன், விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் எஸ்.மோகனபாலன், 'யுனிசெவ்' நிறுவனத்தைச் சேர்ந்த பூநகரிக் கோட்ட சுகாதார இணைப்பாளர் பிரதீபன் உட்படப் பலர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். (த-6-415)

## வன்னிச் செய்திகள்

# மக்கள் மத்தியில் கலைப் பயிற்சிகள்

பரந்தன்,டிசெ.9

மக்களது வாழ்க்கைக்கும் விடுதலைக்குமான உறவு பற்றிய அறிவையும் உணர்வையும் மக்களிடம் ஏற்படுத்தும் பொருட்டு கிராம ரீதியில் கலைப்பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்ந நிகழ்வு கடந்த வாரம் தர்மபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கண்டாவளைப் பிரதேசத்திற்குட்பட்ட ஆறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

தமிழீழ கொள்கை முன்னெடுப்பு பிரிவுப் பொறுப்பாளர் ரமேஸ், அரங்க செயற்பாட்டுக் குழு ஆசிரியர் விந்தன், கிளிநொச்சி மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச் சேர்ந்த குயிலன்,மன்னார் மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச் சேர்ந்த வதன், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நளனரூபன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (த-203-352)

# சர்வதேச வலுவிழந்தோர் தினம் வெண்புறா நிறுவனத்தில் அனுஷ்டிப்பு

கிளிநொச்சி,டிசெ.9

சர்வதேச வலுவிழந்தோர் தினம் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தினால்வன்னிப் பெருநிலப்பரப்பில் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் உள்ள அதன் தலைமைச் செயலகத்திலும் பளை, பூநகரி, புதுக்குடியிருப்பு, மாங்குளம், பாலங்காமம், நெடுங்கேணி, கனகராயன்குளம், ஆண்டான்குளம், பாலம்பிட்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள தொடர்பகங்களிலுமாக இந்த நிகழ்வு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள வெண்புறா நிறுவனக் கிளைகளிலும் அவ்வப்பகுதி தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வலுவிழந்தோர் தின நிகழ்வு கடைப்பிடிக்கப்பட்டது.இந்த நிகழ்வில் சுமார் தொளாயிரத்துக்கும் மேற்பட்ட வலுவிழந்த குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். அவர்களுக்கு உணவல்லாத வீட்டுப் பாவனைப் பொருள்களும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைமைச் செயலகத்தால் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் சந்திரசேகரம்பிள்ளை தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதில் மங்கள விளக்கினை தமிழர் புனர்வாழ் வுக் கழக கிழக்குப் பிராந்திய இணைப்பாளர் ஜெகா, வெண்புறா நிறுவனத்தின் ஆரம்ப கால உறுப்பினர் திருமதி புஸ்பகுமார் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடகப் பிரிவைச் சேர்ந்த ஆதவன், சர்வதேச 'கெயர்' நிறுவன திட்டப் பணிப்பாளர் கணேசலிங்கம் உட்பட பலர் கருத்துரைகளை வழக்கினர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள் சர்வதேச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்படப் பெருமளவானோர் இந்நிகழ்வில் பங்குபற்றினர். இதில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 105 வலுவிழந்தவர்களுக்கு வீட்டுப் பாவனைப் பொருள்கள் அடங்கிய பொதிகளும் கற்றல் உபரணங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

(த-6)

# நீர்ப்போக்கிகள் சேதம்; பயணிகள் சிரமம்!

பரந்தன்,டிசெ.9

உருத்திரபுரம் ஏழாம் வாய்க்காலின் நீர்ப்போக்கிகள் மற்றும் பாலம் என்பன மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதால் பயணிகள் பெரும் சிரமப்படுகின்றனர்.

கிளிநொச்சி கந்தசாமி ஆலயத்திலிருந்து குருகுலம் சிறுவர் இல்லம் வரையான வீதியில் அமைக்கப்பட்டுள்ள நீர்ப்போக்கிகளும் பாலமுமே பெரும் சேதமடைந்துள்ளன.

அவை சேதமாகிப் பல மாதங்களைக் கடந்துள்ளபோதும் அதனைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தைக் கவனத்திலெடுத்து நீர்ப்போக்கிகளையும் பாலத்தையும் புனரமைப்பதற்கு ஆவன செய்யவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-352)

# கிளிநொச்சி மாவட்ட அஞ்சல் அலுவலர்கள் 33 பேருக்கு மீண்டும் நிரந்த்ர நியமனம்

கிளிநொச்சி ,டிசெ.9

கிளிநொச்சி மாவட்டத்தில் அஞ்சல் அலுவலகங்களில் நிரந்தர நியமனத்தில் பணியாற்றி 1992ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆளணி குறைப்பின்போது தற்காலிக நியமனமாக்கப்பட்ட அஞ்சல் ஊழியர்கள் 33 பேருக்கு கடந்த 24ஆம் திகதியில் இருந்து மீண்டும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் வீ.குமரகுரு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி, பூநகரி, பரந்தன், பளை ஆகிய அஞ்சலகங்களில் 1992ஆம் ஆண்டு பகுதியில் நிரந்தர நியமனத்தில் கடமையாற்றி வந்த இவர்கள் திடீர் ஆளணி குறைப்பினால் தற்காலிகமாக்கப்பட்டனர்.

மீண்டும் நிரந்தரமாக்குமாறு கடந்த 13 வருடங்களாக பல்வேறு தடவைகள் கோரிக்கை விடுத்தபோதிலும் இவர்களின் நியமனம் இழுத்தடிக்கப்பட்டு வந்தது. தற்போதைய வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் இது விடயத்தில் கூடிய அக்கறை கொண்டு தலைமை அலுவலகத்துக்கு அழுத்தம் கொடுத்ததன் காரணமாக இந்த 33 பேருக்கும் மீண்டும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இவ்வாரம் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(த-180)



தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாளை முன்னிட்டு முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் வைத்து மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறையினர் அப் பிரதேச மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளை அன்பளிப்பாக வழங்கினர். கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான செந்தாளன் மாணவன் ஒருவனுக்கு துவிச்சக்கர வண்டி வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(த-6-415)

# கிளிநொச்சி விவசாயிகளுக்கென நெல் சுத்திகரிப்பு இயந்திரம்

பரந்தன்,டிசெ.9

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் தேவைகளுக்கென நெல் சுத்திகரிப்பு இயந்திரத்தை விரைவில் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று உணவு விவசாய ஸ்தாபன இணைப்பாளர் பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த கால யுத்த அனர்த்தங்களுக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் அரசினர் நெற்பண்ணையில் நெல் சுத்திகரிப்பதற்கான இயந்திரம் பொருத்தப்பட்டு விதை நெல் சுத்திகரிக்கப்பட்டு வந்தது. பின்னர் இடம் பெற்ற அனர்த்தங்களால் அச்செயற்பாடு செயலிழந்துபோனது.

தற்போது அப்பகுதி நெற்செய்கையாளர்கள் விடுத்த கோரிக்கைகளை அடுத்துபல லட்சம் ரூபா பெறுமதியில் நெல் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு இங்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இவ்வியந்திரத்தைப் பொருத்துவதற்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. வேலைகள் முடிந்ததும் இயந்திரம் பொருத்தப்படும்.

இதன்மூலம் விவசாயிகள் புல்விதை, கலப்பு நெல், மற்றும் மணல் அற்ற தரமான நெல்லைப் பெற்றுப் பயன் பெறமுடியும் எனவும் தெரிவித்தார்.

(த-6-352)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நகை வேலை செய்வதற்குரிய கம்பித் தகடு மெஷின், டை மெஷின் (200) (டை) உட்பட விற்பனைக்குண்டு. தொடர்பு: 021222 9391, 077 6032188. (43744)

டாக்டரின் சொந்தப் பாவனையில் உள்ள NISSAN SUNY 16 - தொடர் இலக்கம் உள்ள கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: வீ.சுதாகரன் (டாக்டர்), ஸ்ரான்லிக் கல்லூரி முன் ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 6371, 077- 6184656. (43771)

எம்மிடம் கிறேடன் 45 நாள்கள் நிரம்பிய நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.சுட்டி, வட்டுக்கோட்டை. (43772)

சொந்தப் பாவனையில் இருக்கும் இத்தாலி DL மொடல் லம்பிரட்டா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. காலை 9 மணிக்கும்2 மணிக்குமிடையில் தொடர்புகொள்ளவும். தொடர்பு: ச.ஸ்ரீதரசர்மா, பழனி ஆண்டவர் ஒழுங்கை, இருபாலை வீதி, கோண்டாவில். (43758)

**Refresh System**

புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை, மானிப்பாய், 077-3253104, 077-6279671.
(43247)(21.19.16)

## தவறிவிட்டது

மன்னாரைச் சேர்ந்த சேசு அருளானந்தம் பர்னாந்து என்பவருடைய தே.அ.அட்டை (801473007V) யாழ்.நகரை அண்டிய பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் து.துஷ்யந்தன் B.A., ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். T.P.: 077 6623909. (43763)

வவுனியாவைச் சேர்ந்த ம.பிரான்கிரிங்கன் குணநாயகம் என்பவரது தே.அ.அட்டை (803464758V) திருநெல்வேலிப் பகுதியில் 02.12.2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.43, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. T.P..: 0777 179121 தொடர்பு கொள்ளவும். (43766)

**கோபாலையரின்**
தமிழ் இலக்கணப் பேரகராதி
*17 தொகுதிகள்*
**சேமமடு பொத்தகசாலை**
UG.52,பீப்பிள்ஸ் பார்க்,
கொழும்பு-11,
011-2331475 பெற்றுக்கொள்ளலாம்.

**University of Jaffna - Sri Lanka**
**Fuculty of Graduate Studies**
**Examination - 2005**

Postgraduate Diploma in Education Part time I
(Batch II - 2004/06) &
Part Time II (Batch I - 2003/05 Jaffna & Vavuniya
Postgraduate Diploma in Education-
Full time -2004/05
Master of Education (Batch V-Jaffna) &
(Batch II - Vavuniya)
Postgraduate Diploma in Public Administration-
2004/05 Batch III

Applications are invited from eligible students to sit for the above Examination.

Examination entry forms could be obtained from the office of the Dean, Faculty of Graduate Studies, University of Jaffna/Dean Faculty of Business studies Vavuniya Campus. Perfected applications should be returned on or before 20.12.2005 at the Faculty of Graduate Studies, University of Jaffna/Faculty of Business studies, Vavuniya Campus.

Candidates repeating the Examination for the above courses are also requested to apply within the above date.

7/12/2005 **Registrar**
(C/46695)(21)

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

வலி.கிழக்கு,டிசெ.9

மீன்பிடித்துறையோடு சம்பந்தப்பட்ட தொழில் முயற்சியில் ஈடுபடும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாச உறுப்பினர்களுக்காக நடத்தப்படவிருந்த தொழில் முன்னேற்றம் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு நடைபெறமாட்டாது.

யாழ். மாவட்ட கடற்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் திணைக்கள கேட்போர்கூடத்தில் இக்கருத்தரங்கு நடைபெற இருந்தது.

இந்தக் கருத்தரங்கு நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(த-180)

## திருத்தப்படாத வீதி

யாழ்ப்பாணம்,டிசெ.9

கொழும்புத்துறை, வளன்புரம் சென்.ஜோசப் வீதி கடந்த 10 வருடங்களுக்கு மேலாக எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. தற்போது பெய்து வரும் மழை காரணமாக இவ் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இதனால் இப்பகுதிகளில் தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளதாகவும் இரவு நேரங்களில் இப் பகுதியூடாகப் பயணம் செய்வோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-190)

# கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலை ஆசிரியை திருமதி ச.அருணகிரிவாசன்*
*அவர்களின் அன்பு மாமியார்*
**அமரர் சின்னம்மா இராமலிங்கம்**
*அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**அதிபர், ஆசிரியர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை. (43779)(32-45-14)

# மூன்றாவது சிரார்த்த நினைவுத்துளிகள்

மண்ணிலே மலராக 05 - 04 - 1926



விண்ணிலே விழுதாக 13 - 12 - 2002

நெடுந்தீவைச் சேர்ந்த
**அமரர் தனுக்கோடி புண்ணியமூர்த்தி**
(இளைப்பாறிய அரச மருந்துக்கலவையாளர்)
**திதி: 09.12.2005**

ஆண்டுகள் மூன்றுதான் கடந்தென்ன
ஆயிரம் உறவுதான் இருந்தென்ன
ஆனந்தமுடனே எம்மோடு உடனிருந்து
அன்பு மொழி பேச நீங்கள் இன்றில்லையே!
சிறப்பாய் வாழ்வளித்து இறப்பால் எமைப் பிரிந்து
சென்ற இடம் தெரியாது தேடுகின்றோம் வருவீரோ?

19/1, சாஸ்திரியார் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
T.P. 222 6232. (43777)(32-45-14)

உங்கள் நினைவில்:
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# எமக்குத் இன்னல் ஏற்படும்போதே இறைவனை நினைக்கின்றோம்...

தாம் ஆட்கொண்டபோது பெற்ற அனுபவத்தை தேவாரம் பாடிய மூவரும் ஆங்காங்கே பாடியுள்ள போதிலும் மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்திலே அதிகமான பாடல்களில் பாடியுள்ளதைக் காணலாம்.

அந்த அனுபவத்தை திருவாசகத்திலே அவர் இருவகையாகப் புலப்படுத்தியுள்ளாரென்று கூறலாம்.

இதற்கு முந்திய கட்டுரையில் அவர் போற்றித் திருவகவலில் பாடியுள்ளதைப் பார்த்தோம். 'எனது அனுபவம் இது' என்று அப்பாடலில் அவர் நேரிடையாகக் கூறவில்லை. ஆனால், அவரது அனுபவமே அப்பாடலில் வெளிப்படுத்தப்படுகிறது.

திருமதி
**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

பல பாடல்களில் அவர் ''இது எனது அனுபவம்'' என வெளிப்படையாகக் கூறியுள்ளார். அவற்றுள் ஒன்றை இங்கு பார்ப்போம். இப்பாடல் திருத்தெள்ளேணத்தில் உள்ளது.

சிறுபிள்ளை ஓலையால் செய்த காற்றாடிகளை வைத்து விளையாடுவதை நாம் கண்டிருக்கிறோம். பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம், அறம், மறம் ஆகியவை இந்தக் காற்றாடியை ஒத்தவை. இவை மாறிமாறிச் சுற்றி வருபவை. பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம் என்பனவற்றை எண்ணும்போதே எமக்கு அச்சமேற்படுகிறது. இவற்றினாலேற்படும் அச்சத்தைப் போக்கி, இறைவன் திருவாதவூரடிகளை ஆட்கொண்டான். மற்றொரு வகையாகக் கூறினால் இறைவன் அவரை ஆட்கொண்டதனால் அவருக்கு இந்தப் பெரும் அச்சம் இல்லாதுபோய்விட்டது.

மறதி எல்லோருக்குமே கஷ்டந்தரும். மறதியின் காரணமாக மாமேதைகளே கஷ்டப்பட்டிருக்கின்றார்கள். மாணிக்கவாசகர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதனால் மறதியிலும் இறைவனை மறவாத நிலை கிட்டுகின்றது. மாணிக்கவாசகப் பெருமான்




*கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்*
*போ டிறப்பெனும்*
*அறம்பாவ மென்றிரண் டச்சந்தவிர்த் தென்னை*
*ஆண்டு கொண்டான்*
*மருந்தேயுந் தன்கழல்நான் மறவாவண்ணம்*
*நல்கியஅத்*
*திறம்பாடல் பாடிநாம் தெள்ளேணங்*
*கொட்டோமோ*

என்று தான் ஆட்கொள்ளப்பட்ட அனுபவத்தைப் பாடியுள்ளார்.

இறைவன் தனது கழல்களை மாணிக்கவாசகப் பெருமான் மறந்துங் கூட மறவாமலிருக்கும் வண்ணம் நல்கியுள்ளார். அவர் மறந்தும் இறைவனது பாதங்களை மறக்கமாட்டார். அந்த நிலை எமக்குக் கிட்டாது. நாம் தேவை ஏற்படும் போதுதான் இறைவனை நினைப்போம். ஏனைய பொழுதுகளில் மறந்து விடுவோம். இறைவனை இடையறாது சிந்திக்க அவனருள் வேண்டும். இறைவன் ஆட்கொண்டபோது அந்த நிலையையும் அவருக்கு நல்கினான். அதனை ''மறந்தேயும் மறவாவண்ணம்'' என்று பாடியுள்ளது நயக்கத்தக்கது.

மணிவாசகரின் அச்சத்தைப் போக்கி ஈசன் ஆட்கொண்டு தன் கழல்களையே நினைத்து வாழும் நிலையையும் அவருக்கு நல்கியுள்ளார்.

நன்றி:- ஞானச்சுடர்.

# பிரம்மகுமாரிகளின் கண்காட்சி

யாழ்ப்பாணம்,டிசெ.9

இலங்கை பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினரின் படவிளக்கக் கண்காட்சியும் தியான அனுபவம் பெறும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் முற்பகல் 10 மணிக்கு 5ஏ, 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதியில் அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தில் நடைபெறவுள்ளன. (3-203)

# மூன்றாம் மாத நினைவஞ்சலியும் பிறந்த தினமும்



# திருமதி-திலகவதி தர்மராசா

(மலேசியாவில் பிறந்து யாழ்ப்பாணம், கோப்பாய் தெற்கு, தபால் கந்தோர் ஒழுங்கையில் வாழ்ந்தவரும், இறுதிக்காலத்தில் கொழும்பில் சைவப்பற்றும், தமிழ் பண்பாடும் பேணி வாழ்ந்தவர்)

**பிரார்த்தனை செய்வோம்**

எங்கள் மதிப்பிற்குரிய பெருந்தகை திலகவதி அம்மையார் பிரிந்த செய்தி அறிந்து மிகவும் வருந்தினோம். காலத்தால் சமூகத்திற்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் ஒப்பரிய தொண்டாற்றிய உத்தமியைக் காலன் கவர்ந்து விட்டான்.

ஏழை, பணக்காரர், படித்தவர், படிக்காதவர் என்ற பாகுபாடின்றி எல்லோரையும் சரிசமமாக இன்முகம் காட்டி வரவேற்றுப் பழகும் பண்பாளர். 'உடுக்கை இழந்தவன் கை போல இடுக்கண் களைவது நட்பு' என்ற வள்ளுவன் வாக்குக்கமைய வாழ்ந்து காட்டியவர். தன் நலம் கருதாது பிறரின் இன்பதுன்பங்களில் பங்கு பற்றுவது, அவர்களின் நல்வாழ்விற்கும், முன்னேற்றத்திற்கும், உறு துணையாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர்.

தனது வாழ்நாளில் பெரும்பகுதியைத் திருத்தல யாத்திரைக்குச் சென்று இறைவழிபாட்டிலும் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டதுடன், அதற்கமைவாக பிறரிடமும் அன்பு, இரக்கம், கருணை முதலியவற்றையும் காட்டிவந்தார்.

தமது சமயத்தை மதித்து அதில் எவ்வாறு ஈடுபாடு கொண்டாரோ அதுபோல தமது மொழியிலும் ஈடுபாடு கொண்டார் என்பதற்கு உதாரணமாக பின்வரும் விடயத்தைக் கவனிக்கலாம்.

அம்மையார் தன்னகத்தே உள்ள அறிவாற்றலை மற்றவர்கள் அறியவும், அவர்கள் அனுபவிக்கவும், வேண்டுமென்ற நன் நோக்குடன், கனடாவில் எழுதி ஆக்கிய தத்துவங்கள், கட்டுரைகள் கதைகள் மற்றும் கவிதைகள் ஆகியவற்றை அந்நாட்டின் வானொலியிலும், பத்திரிகைகளிலும் சில வருடங்களுக்கு முன் வெளியிட்டார்.

அன்னாருடன் பழகியவர்களின் மனங்களில் அவர் நாமம் என்றும் நிலைத்து நிற்கும். மனத்திற்குச் சுமையான இக்கால கட்டத்தில் அம்மையாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். அவரின் பிரிவினால் சோகமாகியுள்ள குடும்பத்தினருடன் சங்கமமாகிக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நல்லூர் கிருஷ்ணபிள்ளை
கிருஷ்ணபவான் யாழ்ப்பாணம்

# பட்ஜெட்டில் முக்கிய அம்சங்கள்

- கர்ப்பிணித் தாய்மாருக்கு மாதம் 200 ரூபா கொடுப்பனவு.
- குறைந்த வசதிகளுடைய பாடசாலைகளுக்கு இலவச பகலுணவு.
- ஆழிப்பேரலை மற்றும் கலவரங்களால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு மாதாந்தம் 1,500 ரூபா.
- வெளிநாட்டுத் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களுக்கு 75 ஆயிரம் ரூபா வரி.
- இளம் ஊடகவியலாளர்களுக்கு நிதியுதவி.
- அங்கவீனமுற்றவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களுக்கு வரிவிலக்கு.
- சமுர்த்திக் கொடுப்பனவு 50 வீத அதிகரிப்பு.
- 2006ஆம் ஆண்டில் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு.
- பெருந்தோட்டத்துறையில் 50ஆயிரம் வீடுகள் அபிவிருத்தி.
- சேரி வீடுகளுக்குப் பதிலாக 60 ஆயிரம் புதிய வீடுகள்.
- நெல்லின் விலை ரூ.16.50 முதல் ரூ.17.50 இற்குமிடையே உயர்வு.
- தேயிலை, இறப்பர், தென்னை பதனிடும் தொழிற்சாலைகள் மீதான பொருளாதார சேவைக் கட்டணம் குறைப்பு.
- பால் பதனிடும் இயந்திராதிகள் மீது தீர்வை வரி மற்றும் பெறுமதி சேர்வரிகளுக்கு விலக்கு.
- இறக்குமதி செய்யப்பட்ட சகல வகையான கடதாசிகளுக்கும் 15 வீத தீர்வை வரிக் குறைப்பு.
- மோட்டார் சைக்கிள் உற்பத்தி வரி நீக்கம்.
- ரயர்களின் இறக்குமதித் தீர்வை 15 வீதம் வரை குறைப்பு.
- சூதாட்ட வரி அதிகரிப்பு.
- துறைமுக மற்றும் விமானநிலைய வரி 2.5 வீதமாக அதிகரிப்பு.
- மதுபான விற்பனை நிலையத்திற்கான வருடாந்த உரிமைக் கட்டணம் 50 வீதத்தால் அதிகரிப்பு.
- பொலீஸ், முப்படையினர் மற்றும் அரச ஊழியர்களுக்கு ஜனவரி முதல் மேலதிகமாக ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுப்படிக் கொடுப்பனவு மற்றும் பல்வேறு சலுகைகள்.
- ஓய்வூதியம் பெறுவோருக்கு 500 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு.
- மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான 'லங்கா புத்ர' என்ற புதிய வங்கி அமைக்கப்படும்.
- அனைத்து சூதாட்ட நிலையங்களும் ஐந்து ஆண்டுகளுக்குள் கொழும்புக்கு வெளியில் மீளமைப்பு.
- நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 5 வீதத்தால் அதிகரிப்பு.
- அத்தியாவசியப் பொருள்களுக்கு சுங்கத் திணைக்களத்தில் மட்டும் வரி விதிப்பு.
- புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம் அறிமுகம்.
- கமத்தொழில் உற்பத்திகளுக்கு வரிவிலக்கு.

# ஒரே பார்வையில் வரவு - செலவு

| | |
|---|---|
| வருமானம் (சுனாமி சாராமல்) | - ரூ.48 ஆயிரத்து 438 கோடி |
| செலவினம் (சுனாமி சாராமல்) | - ரூ. 68 ஆயிரத்து 164 கோடி |
| பற்றாக்குறை (சுனாமி சாராமல்) | - ரூ.19 ஆயிரத்து 726 கோடி |

## சுனாமி செலவினம்

| | |
|---|---|
| உத்தேச வருமானம் - | ரூ. 5 ஆயிரம் கோடி |
| உத்தேச செலவினம் - | ரூ. 5 ஆயிரம் கோடி |

# அலவன்ஸ் ரூ. 1,000 உட்பட சம்பளம் அரச ஊழியருக்கு ரூ. 1,300 அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.9

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த வரவு - செலவுத்திட்டத்தின் படி பொலீஸார் முப்படையினர் உட்பட அனைத்து அரச ஊழியர்களுக்கும் 100 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி உள்ளடங்கலாக மாதமொன்றுக்கு ஆகக் குறைந்தது 1,300 ரூபாவைக் கொண்ட சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஒவ்வொரு வருடமும் ஜூன் மாத இறுதியிலும், டிசெம்பர் மாத இறுதியிலுமுள்ள வாழ்க்கைச் செலவு வீத அடிப்படையில் சீராக்கப்பட்டு அலகுமாற்றமொன்றிற்கு 2 ரூபா 50 சதம் மேலதிகமாக வழங்கப்படும்.

அத்துடன், நிர்வாக தேசிய சபையினால் சிபாரிசு செய்யப்பட்ட புதிய சம்பளத்தில் 50 சதவீதத்தையும் உள்ளடக்கி மேற்கண்ட வாழ்க்கைச் செலவுப் படியினையும் உள்ளடக்கியே 1,300 ரூபாவைக் கொண்ட ஆகக் குறைந்த சம்பள அதிகரிப்பு இடம்பெறவுள்ளது.

இதேவேளை, பொலீஸார் முப்படையினர் மற்றும் அரச ஊழியர்கள் ஒவ்வொரு ஆண்டும் பயன்படுத்தாத விடுமுறைகளில் ஆகக்கூடியது 30 நாட்களை அந்த வருடத்தின் டிசெம்பர் 31 இல் எடுக்கப்பட்ட சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு காசாக்குவதற்கு அரச சேவையாளர்கள் அனுமதிக்கப்படுவர். அத்துடன் சகல ஊழியர்களும் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக ஏழு நாள்கள் விடுமுறை எடுக்குமாறு கேட்கப்படுவர்.

ஆண் அரச ஊழியர்களுக்கு அவர்களது மனைவியின் மகப்பேற்றுக் காலத்தில் மூன்று நாள் சிறப்பு விடுமுறை வழங்கப்படுமென்றும் வரவு - செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க-6-7)

# தனியார் துறையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், அதற்கு தேவைப்படும் செலவினங்கள் என்பனவற்றை முதல்பகுதி கொண்டிருக்கும்.

அபிவிருத்தித்திட்டங்கள், சம்பள உயர்வுகள் மற்றும் மானியங்கள், நலன்புரித் திட்டங்கள் என்பனவற்றிற்குத் தேவைப்படும் நிதியை எவ்வாறு பெறப்போகிறோம், என்னென்ன நிவாரணங்களை வழங்கப் போகிறோம், அதற்கு தேவைப்படும் நிதியை எவ்வாறு பெறப்போகிறோம் என்பதை இரண்டாவது பகுதியிலும் வெளியிடுவதுதான் வழமை.

ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரே மூச்சில் - ஒரே புத்தகத்தில் - அனைத்தையும் வாசித்து முடித்துவிட்டார்.

நவம்பர் 8 ஆம் திகதி அப்போதைய நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தில் 'மஹிந்தவின் சிந்தனை'கள் உட்படுத்தப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இதனால், ஜனாதிபதியின் வரவு - செலவுத்திட்டத்தில், அவரின் தேர்தல் மேடைகளில் கூறப்பட்ட அனைத்தும் உள்ளடக்கப்பட்டி ருக்கும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் பெரும் ஏமாற்றமாகவே அமைந்துவிட்டது.

ஜனாதிபதிபெட்டி நிறையக் கொண்டு வந்து மனம் நிறையத் தருவார் என எதிர்பார்க்கப்பட்ட போதும், பெட்டியே கொண்டு வராமல் வெறும் கையுடன் வந்து ஏமாற்றி விட்டதைப்போலவே சபையில் ஒரு வெறுமை காணப்பட்டது.

நிதியமைச்சர் தனது ஆலோசனைகளை முன்மொழியும்போது சபையில் இருப்போர் ஆரவாரமாக மேசைகளைத்தட்டி ஆரவாரம் செய்வது சகஜம் . ஆனால், இம்முறை அதையும்கூடக் காணமுடியவில்லை.

நண்பகல் 12.45 மணிக்கு வரவு - செலவுத்திட்ட உரையை ஆரம்பித்த ஜனாதிபதி சரியாக பி.ப. 3.15 மணிக்கு உரையை முடித்துக் கொண்டார். மூன்று மணிநேரம் மூச்சு விடா மல் ஜனாதிபதி உரை நிகழ்த்திய போதும், தனியார் துறையினர் பெருமூச்சு விடும் வகை யில் ஓரம்கட்டப்பட்டுள்ளார் என்பது முக்கிய மான ஓர் அம்சம்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் நேற்று சபையில் காணப்பட்டனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது உரையை ஆரம்பித்து சில நிமிடங்களில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபையிலிருந்து வெளியேறிவிட்டார்.

பொதுவாக இந்த வரவு - செலவுத்திட்டம் முற்றும் முழுதாக அரசாங்க ஊழியர்களை மட்டுமே திருப்திபடுத்தும் ஒரு வரவு - செலவுத்திட்டமாகவே அமைந்துள்ளது.

அதிகாரப் பரவலாக்கம் என்பதே கிடையாது. கிராமியமட்ட அபிவிருத்திக்கே முதல் இடம் என்று கூறிக்கொடிருந்த ஜனாதிபதியின் கூட்டணிகளான ஜே.வி.பியினதும் ஜாதிக ஹெல உறுமயவினதும் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் கிராமியப் பொருளாதார அபிவிருத்தியை மையமாகக்கொண்டு வரவு - செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் ஜனாதிபதியின் கூட்டாளிகள் மட்டும் திருப்தியடையலாம்.

இந்த வரவு - செலவுத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்களாவன:-

பழ வகைகள், மரக்கறி மற்றும் ஏனைய விவசாய உற்பத்திப் பிரிவுகளை விருத்தி செய்வதற்காக அவற்றின் ஏற்றுமதி வருமான உழைப்பின் மீது விதிக்கப்பட்டுள்ள 15 சத வீத வருமான வரி நீக்கப்படுகின்றது.

டவர் மண்டபம் மற்றும் மத்திய கலாசார நிதியம் என்பவற்றுக்கு வருமானவரி மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிலிருந்து விலக்கு, கலைஞர்களின் பயன்பாட்டிற்கு கலாநிலையம் ஒன்றை மலை நாட்டில் அமைக்க 50 மில்லியன் ஒதுக்கீடு, இளம் ஊடகவியலாளர்களுக்கு நிதியுதவி வழங்க 75 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, சிறுவர், முதியோர் மற்றும் அங்கவீனமுற்றோர் இல்லங்களை நவீனமயப்படுத்த 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, 17 வைத்தியசாலைகளை ஆதார வைத்திய சாலைகளாக மேம்படுத்த 300 மில்லியன் ரூபா, சமுர்த்தி பயன்பெறுவோர் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள உதவி செய்தல் மற்றும் கிராமிய அபிவிருத்திக்காக 6,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

நகரப்பகுதியில் புதிய வீடுகளை அமைக்க 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, 50 கிலோ உரப் பொதியை 350 ரூபா வீதம் வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு 8,500 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பு, அரச விதைப்பண்ணைகளைப் புனரமைக்க 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, வேளாண்மைக் கடன்தொகையை அதிகரிக்கக் கூடிய வகையில் வங்கிச் சட்டங்களில் திருத்தம், நெல் கொள்வனவு செய்ய விசேட திட்டம், இதற்காக 2,000 மில்லியன் ரூபா செயற்பாட்டு நிதியாக ஒதுக்கீடு, சேதன கமத்தொழிலை மேம்படுத்த 415 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, கமத்தொழில் ஏற்றுமதி வருமானத்தின் மீதான 15 வீத வரி நீக்கம், தேயிலை இறப்பர் தென்னை அபிவிருத்திக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கீடு, பெருந்தோட்டப் பயிர் அபிவிருத்திக்காக 700 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, பால் உற்பத்தியாளர்களுக்கு உயர் தரத்திலான பசு மாடுகளை வழங்க விசேட நிவாரணக் கடன், பால் லீற்றரொன்றைப் பெறும் விலை 5 ரூபாவால் அதிகரிப்பு, மகாவலி வலய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 500 தொழில் முயற்சிகளுக்கு விசேட மற்றும் சிறிய நடுத்தர அளவிலான கடன், மீன்பிடி அபிவிருத்தி நிதியமொன்றை அமைக்க 700 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, இறால் செய்கையை மேம்படுத்த 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, அலங்கார மீன் பரிமாற்று நிலையமொன்றை அமைக்க 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

உள்ளூர் புடவை உற்பத்தியாளர்களினால் செலுத்தப்படாத கடன்களை ரத்துச்செய்ய 350 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, சுற்றுலா வலயங்களை அபிவிருத்தி செய்ய 100 மில்லியன் ஒதுக்கீடு, தேசிய ஆராய்ச்சி சபைக்காக 300 மில்லியன் ஒதுக்கீடு.

பொலீஸ் திணைக்கள மேம்பாட்டிற்கு 900 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, வாகனங்களைக் கொள்வனவு செய்ய அரச ஊழியர்களுக்கு 25 வீத தீர்வை வரி நிவாரணம், இடர் முகாமைத்துவம் குறித்த தேசிய சபைக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, றேடார் தொகுதியொன்றை விருத்தி செய்ய 400 மில்லியன் ரூபா ஒதுக்கீடு, வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்வதற்காக 650 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அனுமதி.

(எ-க-6-7)




திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திப்பகுதியில் வீதித்தடைகளை ஏற்படுத்திய மாணவர்கள் அப்பகுதியில் பொல்லுகளுடன் காணப்படுவதை முதலாவது படத்தில் காணலாம். அடுத்துள்ள படங்கள், கலட்டிப்பகுதியில் அமைந்துள்ள இராணுவக் காவலரணை அகற்றக்கோரி மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்டவை. படைக் காவலரனுக்கு முன்னால் படையினரை வெளியேறக்கோரும் சுலோகத்துடன் மாணவன் ஒருவன் அமைந்திருக்கும் துணிச்சலையும் இறுதியாக உள்ள படத்தில் காணலாம். (படங்கள்: பிரபா)

நிகரற்ற கல்விச்சேவையில் கடந்த பலவருடங்களாக முன்னணியில் திகழும் எமது நிறுவனத்தில்

## புதிய கல்வியாண்டு - 2006

**ஆரம்பம்: 11-12-2005 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி**

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. பல புதிய மாணவர்கள் முற்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுவருவதால் குறித்த எண்ணிக்கையுடன் அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. - அதிபர்.

**மது கல்வி நிறுவனம்**
*டச்சுவீதி, இருபாலை, கோப்பாய்.*

(43788)(98)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 05 - 12 - 1951



விண்ணில் 09 - 11 - 2005

அமரர்
## வைரவநாதன் புவனேந்திரன்

*அவனியில் மலர்ந்து*
*அன்பாய் பண்பாய்*
*பாசமாய் மணம் வீசி*
*நேசமாய் எம்*
*நெஞ்சில் நிறைந்து*
*பார்விட்டு பரமபதம்*
*சென்றுவிட்ட*
*உங்கள் நினைவுகளை*
*எங்கள் கனவாய் சுமந்து*
*கண்கள் நிறைந்திருக்க*
*உங்கள் ஆத்ம சாந்திக்காக*
*கண்ணீர்ப்பூக்களை*
*காணிக்கையாக்குகின்றோம்*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.
(சி-46697)
(21.14.17)

பாசம் நிறைந்த
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் பாக்கியம்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, ஆடியபாதம் வீதி, மணியகிரியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாக்கியம் 08-12-2005 வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற A.K.சுப்பிரமணியத்தின் மனைவியும் சொர்ணபாக்கியம் (இன்பமலர்), செல்வமலர், அரியமலர், முருகதாஸ், இந்திரஜோதி ஆகியோரின் பாசமிகு தாயும் சபாரத்தினம், சித்திவிநாயகப்பிரகாசம், ஜெயனொலிபவன், காலஞ்சென்ற சுசீலா, சிறீசிவபாலசுந்தரம் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**
**T.P. 071 4182341**
(43793) (24.14.17)

தகவல்:
**நா.ஜெயனொலிபவன்**
(ஓய்வுபெற்ற அதிபர்).

## அனுதாபச் செய்தி

எமது ஆருயிர் நண்பியான துர்யாவினுடைய அன்புத் தந்தையார் **சபாநாயகம்** அவர்கள் நேற்று (08.12.2005) வியாழக்கிழமை காலமாகியதையிட்டு அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

(43789)(21.17.45)

**அராலி நண்பிகள்.**

## 74 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரம்

கோப்பாய்,டிசெ.9

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள உரும்பிராய் தெற்கு, யோகபுரம் பகுதியில் இதுவரை எவ்வித ஆவணங்களும் இன்றி கடந்த 40 வருடங்களாக அரச காணியில் குடியிருந்து வந்த 74 குடும்பங்களுக்கு கோப்பாய் பிரதேச செயலரால் காணிக்குரிய ஆவணமான உத்தரவு பத்திரம் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இவர்கள் காணிக்குரிய ஆவணம் இன்மையால் அரசினால் வழங்கப்பட்ட உதவிகளைப் பெறமுடியாத நிலையில் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-ரி)

## இலட்சார்ச்சனை பெருவிழா

சாவகச்சேரி - கல்வயல் - பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீ அம்பலவாணர் வீரகத்தி விநாயகர் தேவஸ்தான இலட்சார்ச்சனை விழா எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 25ஆம் திகதி வரையான பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

இலட்சார்ச்சனை பெருவிழா தேவஸ்தான பிரதமகுரு க. சோமஸ்கந்தக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

(த-31)

## முன்பள்ளி ஆசிரியர் கூட்டம்

நல்லூர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ளது.

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை **திருமதி ரி.விஜயலக்சுமி** அவர்களின் அன்புச் சகோதரி



## திருமதி மோகனா தெய்வேந்திரா

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையஇறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(43794)
(24.21.17.14)

**கல்லூரிச் சமூகம்**
**யா/ வேலணை மத்திய கல்லூரி,**
**வேலணை.**

# பள்ளி முதல்வர் வேண்டுகை

**நிதித்துறையால் நடத்தப்பெறும் நிதி மேலாண்மைக் கல்லூரியின் முதல்வர் பணிநிலைக்குப் பொருத்தமான ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.**

01. *தகைமைகள்:*
    1. ஓய்வுபெற்ற பள்ளி முதல்வர்
    2. ஓய்வுபெற்ற ஆசிரியர்
    3. ஓய்வுபெற்ற அரச ஆளுகை (நிர்வாக) அலுவலர்
    4. பட்டதாரி
02. *பட்டறிவு:* 10 ஆண்டுகளுக்குக் குறையாத ஆளுகைப்பட்டறிவு
03. *அகவை:* **40 தொடக்கம் 60 வரை**
04. *வேண்டுகை முடிவுநாள்:* **20-12-2005**
05. *வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:*
    **பொறுப்பாளர்,**
    **மனிதவள மேம்பாட்டுப் பகுதி,**
    **நாகதம்பிரான் வீதி,**
    **ஆனந்தபுரம்,**
    **கிளிநொச்சி.**
06. *நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்:* 27-12-2005 காலை 9 மணி
07. *நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:*
    **மனிதவள மேம்பாட்டுப் பகுதி,**
    **நாகதம்பிரான் வீதி,**
    **ஆனந்தபுரம்,**
    **கிளிநொச்சி**
08. *நேர்முகத் தேர்வுக்கு வருகைதருவோர் கல்வித்தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ்கள், வதிவிடச் சான்றிதழ், அடையாள அட்டை, ஏனைய சான்றிதழ் ஆகியவற்றின் படிகளுடன் வருகை தருக.*
09. *சம்பளம்: முழுநேர முதல்வராகத் தெரிவுசெய்யப்படுவோருக்கு தகைமைக்கும் பட்டறிவுக்கும் ஏற்ப 15,000/ ரூபாவுக்குக் குறையாமல் வழங்கப்படும்.*

**ஆளுகை,**
**மனிதவள மேம்பாட்டுப் பகுதி,**
**நிதித்துறை.**

(சி/46699) (24-21-17-45)

# பகிரங்க ஏலவிற்பனை

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

இலங்கை வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.11.2004 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத நகைகள் யாவும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்ப்பாண மேற்தரக் கிளையில் மார்கழி மாதம் 10, 11 ஆம் திகதிகளில் காலை 9மணி முதல் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என அறியத்தருகின்றோம்.

- யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை
- யாழ்.இரண்டாம் கிளை (ஸ்ரான்லி வீதி)
- பருத்தித்துறை
- மானிப்பாய்
- சுன்னாகம்
- திருநெல்வேலி

இந்த நகைகள் மீட்கப்படவேண்டிய கடைசித் திகதி 09-12-2005.
அறிவித்தலின்றி ஏலவிற்பனைத் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**உதவிப் பொதுமுகாமையாளர்**
*(வடபிராந்தியம் - யாழ்ப்பாணம்).*

(சி/46696)(26-21.14.17)

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னம்மா இராமலிங்கம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் சொய்சாபுர மொரட்டுவவிலும், (Boreamwood) லண்டனிலும் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி சின்னம்மா இராமலிங்கம் அவர்கள் 04.12.2005 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் அமரர்களான அளவெட்டி நாகமுத்து - தங்கமுத்து தம்பதியரின் அன்புமகளும் அமரர் வாதரோக வைத்தியர் சு.இராமலிங்கம் (தர்மகர்த்தா, இணுவில் கந்தசுவாமி கோயில்) அவர்களின் அருமை மனைவியும் கமலாதேவி (சொய்சா புரம்), அமரர் நிர்மலாதேவி, அமரர் பாலசுப்பிரமணியம், விமலாதேவி (லண்டன்), அருணகிரிவாசன் (பதிலதிபர், யா/ கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் த.பால சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற இலிகிதர், புகையிரதத் திணைக்களம்), அமரர் ந.அருமைராஜா (உரிமையாளர், ஜனா டன்ஸ்), வை.லோகேஸ்வரன் (லண்டன்), திருமதி அ.சரோஜினி (ஆசிரியை, யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அருமை மாமியும் கனடாவில் வசிப்பவர்களான திருமதி சி.செந்தில்புஷ்பா (டாக்டர்), மயூரன் (பொறியியலாளர்), லண்டனில் வசிப்பவர்களான திருமதி உ.சுகந்தி, குமரவேள் (B.Sc.), திருமதி அ.சுரேஜி (B.Sc.), ஜனனி, அகிலா, அகல்யா, அரன் (மாணவர்கள்) மற்றும் நமணன் (B.Sc.), ஜனார்த்தனன் (B.Sc.,ஆஸ்திரேலியா), இகபரன் (மாணவன் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), யதுஷ்னா (மாணவி யா/இந்து ஆரம்பப்பாடசாலை ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கவின், சுமேதா, ஜோபினா, சாகித்தியா, கிந்துஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் அமரர் ந.சிவலிங்கம் (வைத்தியர் அளவெட்டி) அவர்களின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 11.12.2005 லண்டனில் நடைபெறும்.

இந்தஅறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(43792)(42)

தகவல்:
**இ.அருணகிரிவாசன்**
**(பதில் அதிபர், யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்)**

## இப்பொழுது யாழ்ப்பாணத்திலேயே

**No. 01**

பிளாஸ்ரிக் அடையாள அட்டைகள் அரச, தனியார் நிறுவனங்கள், மன்றங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கழகங்களின் உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்களுக்குரிய அடையாள அட்டைகளை டிஜிற்றல் றோலண்ட்இங்ஜெட் பிறிண்டிங் ஊடாக பிளாஸ்ரிக் அடையாள அட்டைகளை பலவர்ணங்களில் யாழ்நகரிலேயே தயாரித்துப் பெற

**எஸ். எஸ். யசோதரன் ஆட்ஸ்**
212, கோயில் வீதி, நல்லூர்.
தொ.பே. 222 9607, 0777110610
(கைலாச பிள்ளையார் கோயில் முன்பாக) (43799) (54-34-12)


# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி சபாநாயகம்

(முன்னாள் உபஅதிபர், யா/வட்டு இந்துக் கல்லூரி)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சபாநாயகம் 07.12.2005 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் கந்தசாமி-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற அமரர் கந்தசாமி சிவசிதம்பரம் ஆகியோரின் அன்பு மருமகனும் புஷ்பதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/வட்டு மத்திய கல்லூரி) அன்புக் கணவரும் திவ்யா, கரதன், துர்யா,சத்யன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மார்க்கண்டேயர், கனகலிங்கம்,ஜெயலட்சுமி,விசுவநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலசுப்பிரமணியம்,கதிர்காமநாதன்,சிவானந்தவல்லி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(08.12.2005)வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி தெற்கு களுவத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி மத்தி,*
*அராலி.*
(43808) (54-34-12)

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

## முருகையா சுரேஸ்குமார்



பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் பெரியதம்பிரான் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா சுரேஸ்குமார் அவர்கள் 07.12.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் முருகையா-நாகபூஷணியம்மா தம்பதியரின் அன்பு மகனும் அமரர் சந்திரன் - கமலேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும் திபாகனின் அன்புத் தந்தையும் சதீஸ்குமார், கஸ்தூரி (நோர்வே) ரமேஸ்குமார், சுகந்தி, பாலகுமார், சந்திரகுமார், துஸ்யந்தி, சசிகுமார், இளமுருகன், தமயந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற ஜெசந்திரன் (ராஜீ), ஜெசீலன் (கண்ணன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*71, பெரியதம்பிரான் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
(43807) (54-

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## முருகேசு கனகரத்தினம்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொட்டடி சிவன் பண்ணை வீதியை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு கனகரத்தினம் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்கள் 08.12.2005 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான முருகேசு-சேதுப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் -செல்லம்மா தம் பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பொன்னம்மா, சின்னம்மா மற்றும் சண்முகம், துரைராசா (சுவிஸ்), காலஞ்சென்ற கதிர்வேல்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற கோணேஸ்வரியின் மைத்துனரும் சிவதாஸ்(ஜேர்மனி) ஜெயதாஸ் (கனடா), ஜெயவதனி (லண்டன்), சசிவதனி(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பேரின்பமணி (ஜேர்மனி), திலகரூபி (கனடா), சிவகந்தரூபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மோகன்ராஜ், கிரிராஜ் (சுவிஸ்), லதா (ஜேர்மனி) இந்துலதா, உதயராஜ் (சுவிஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும் பிரியங்கா, சியானுகா, அபிகா (ஜேர்மனி) ஸ்ரீபன், நவீன், பிரவின், ரஜீவன், அஞ்சனா (கனடா), சாம்பவி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல. 95, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
T.P.: 021-2223701
(43812) (54-34-12)

**தகவல்:**
**மனைவி.**

# தொடர் தாக்குதல்கள் கிழக்கிலும் வெடிக்கும்?

ஏறாவூர் - வந்தாறுமூலைப் பகுதியில் இரண்டு இளம் பெண்கள் நேற்று அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் கிழக்கில் தொடர் வன் முறைகளுக்கும் தாக்குதல்களுக்கும் கால்கோள் இடலாம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் அஞ்சுகின்றன.

"தமிழ்த் தேசிய உணர்வாளர் ஒருவர் கொல்லப்பட்டால் அதற்குக் காரணமாக ஆக்கிர மிப்புப் படையிலும், ஒட்டுக் குழுக்களிலும் பலர் கொல்லப் படுவார்கள்." - என்று வடக்கில், யாழ். குடாநாட்டில் 'பொங்கியெழும் தமிழீழ மக்கள் படை' என்ற பெயரில் ஒரு அறிவிப்பு வெளியாகியிருந்ததும்-

நீர்வேலியில் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து அச்சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு நெருக்கமான கோண்டாவிலிலும், இருபாலையிலும் அடுத்தடுத்து இடம்பெற்ற இரு கிளைமோர் தாக்குதல்களில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்பதும்- குறிப்பிடத்தக்கவை.

மேற்படி இரு பெண்களின் படுகொலை களைத் தொடர்ந்து அத்தகையமோசமான நிலைமை கிழக்கிலும் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகி வருவதாக அஞ்சப்படுகின்றது. (எ-க)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி லீலாவதி தம்பிராசா

(செயலாளர், பா. அ. சங்கம்)

*யா / கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகக் கடமையாற்றிய திருமதி லீலாவதி தம்பிராசா இயற்கை மரணமெய்தியுள்ளார்.*

*அன்னாரின் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

***அதிபர்,ஆசிரியர்கள்,பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.***
***யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்,கரவெட்டி.***

(சி-46706) (54-34-12)


## NEW SCIENCE COLLEGE

**விசேட விடுமுறை வகுப்பு** Mon - Fri
சடப் பொருளியல் (1 - 2)
சடமும் கதிர்ப்பும் (2 - 3)
ஆரம்பம்: 12.12.2005

இலத்திரனியல் Sat.,Sun., - (7 - 8)
ஆரம்பம்:10.12.2005

வெப்பவியல் 2007
Mon., Wed., - (6.30 - 7.30)
ஆரம்பம்: 12.12.2005

அலைகளும் அதிர்வுகளும்
Sat., Sun., - (11 - 12)
ஆரம்பம்: 10.12.2005

By. கருணாநிதி
(43803)

## PERSONAL ENGLISH

BA - Part - I
Revision and Paper
ஆரம்பம்: 10.12.2005
காலை 8 மணி
மாலை 5 மணி
வரை வகுப்புகள் நடைபெறும்
8-10, 10-12, .......
40 மணித்தியாலம்
D.C.S. (நிழ்ட்ன்)
342, Stanley Rd, Jaffna.
(42763)



# BARATHY சித்தன்கேணி

எமது ஆசிரியர்களின் திறமைகளுக்கு நிகர் வேறு எவரும் இல்லை. நீங்கள் அறிவீர்கள்

புதிய வகுப்புகள்

தரம் 5 தொடக்கம் 11 வரை
ஆரம்பம்: 10-12-2005 சனி 7 மணி
எமது தனித்துவமும் அதி திறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| ✱ விஞ்ஞானம்<br>திரு. தேவா<br>திரு. பாலச்சந்திரன் | ✱ கணிதம்<br>திரு. எஸ். சிவரூபன்<br>திரு. சிவா |
| ✱ தமிழ்/தமிழ் இலக்கியம்<br>திரு. குகபரன்<br>திரு. தமிழ்மாறன் | ✱ ஆங்கிலம்<br>திரு. விஜயபாஸ்கர், நிறோஜனன்<br>திரு. இராஜகுலசூரியர் |
| ✱ சமூகக்கல்வி<br>திரு. சுதன்<br>திரு. சிவபாலன் | ✱ சமயம்<br>திரு. தரன்<br>திரு. கவிதரன் |
| ✱ புவியியல்<br>திரு. குகதாசன் | ✱ வர்த்தகம்<br>திரு. லோகேஸ்வரன் |
| ✱ சுகாதாரம்<br>திரு. காந்தன் | ✱ தரம் 5 புலமைப்பரிசில்<br>திரு. கலாமோகன் |

குறிப்பு: 1) மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் எமது நிறுவனம் தவிர்ந்த வேறு எந்த கல்வி நிறுவனத்திலும் கற்பிக்கமாட்டார்கள்.
2) அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை
தரம் 9,10,11 இவ்வகுப்புகளுக்கு 90 மாணவர்களுக்கும்
தரம் 5,6,7,8 இவ்வகுப்புகளுக்கு 40 மாணவர்களுக்கும்
அனுமதிகள் வழங்கப்படும்.
3) அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் இடநெருக்கடியைத் தவிர்க்கும் முகமாக 10.12.2005 அன்று உங்கள் அனுமதியினை முன் கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளவும். (43811) (54-34-12)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 20 - 07 - 1940



மறைவு 08 - 11 - 2005

*சிவபாதசுந்தரம் சிவனாகிச் சிரிக்கிறது*
*இறவாத மனிதம் இறையாகி அருள்கிறது.*

## அமரர் கந்தையா சிவபாதசுந்தரம்

(B.A. (Hons), F.C.A. (England and Wales), A.T.I.I. (U.K), Chartered Accountant)

(09.12.2005)

இன்று (09.12.2005) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் இரங்கல் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் மலர்வளையம் வைத்து கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*'சிவஸ்தான்'*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*
(43810) (54-34-12)

அன்னாரின் பிரிவால் துயருறும்:
திருமதி நிர்மலா சிவபாதசுந்தரம்
குடும்பத்தினர்.

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை,காங்கேசன்துறை (மல்லாகம்)

சந்தைகள்,இறைச்சிக்கடைகள், சந்தைக் கடைத்தொகுதிகள்என்பன

**01.01. 2006 தொடக்கம் 31.12.2006 வரை**

**குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான**

# மீள்கேள்வி அறிவித்தல்-2006

**கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி** : 16.12.2005,வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரை
**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:** 19.12.2005,திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை
**கேள்விகள் திறக்கப்படும் திகதி** : 19.12.2005,திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி

ஏனைய மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்திலும் மல்லாகம்,தெல்லிப்பழை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி நிபந்தனைகள் யாவும் 24.11.2005 திகதிய உதயன் பத்திரிகை கேள்வி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டவாறு அமையும்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| குத்தகை விவரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப்பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| **மல்லாகம் உப அலுவலகம்** | | | | |
| 01. இறால்மடம் சந்தை | - | 550/- | 500/- | 150/- |
| 02. அளவெட்டி கருவாட்டுக் கடை,இல.06 | 125/- | - | 500/- | 150/- |
| 03. அளவெட்டி கருவாட்டுக் கடை,இல.07 | 125/- | - | 500/- | 150/- |
| 04. மல்லாகம் சந்தை கருவாட்டுக்கடை | 300/- | 525/- | 500/- | 150/- |
| 05. மல்லாகம் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 300/- | 1050/- | 500/- | 150/- |
| 06. மல்லாகம் பொதுச்சந்தை கடைத்தொகுதிக் கடைகள் இல.06 | 300/- | 25000/- | 1000/- | 150/- |
| **தெல்லிப்பழை உப அலுவலகம்** | | | | |
| 01. கூத்தன் சீமாச் சந்தை | - | 500/- | 500/- | 150/- |
| 02. கடைத்தொகுதி கடைஇல. 01 | 100/- | - | 500/- | 150/- |
| 03. கடைஇல. 02 | 100/- | - | 500/- | 150/- |

(சி-46705) (54-34-12)

வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை (மல்லாகம்) 08.12.2005

திருமதி ஸ்ரீரஞ்சிதமலர் மாணிக்கம், செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.


**மனோகரா யாழ்ப்பாணம்**
7ஆவது வெற்றி வாரமாக இளைய தளபதி விஜய்,அசின்,பிரகாஷ்ராஜ் நடித்த
**சிவகாசி**
கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.நே)
9ஆம் திகதி முதல்
காலை 10.30 காட்சியாக சிவகாசி
1.30,4.30,7.30,10.30 காட்சியாக சூரியா, திரிஷா வடிவேல் நடித்த
**ஆறு**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
9 ஆம் திகதி முதல் புதிய நேரப்படி புதிய காட்சி நேரம்
காலை 10.30, மதியம் 1.30, மாலை 4.30, இரவு7.30,10.30

**ராஜா யாழ்ப்பாணம்**
*இன்று முதல்*
*ஸ்ரீகாந், நமீதா, வடிவேல் நடித்த*
***பம்பரக் கண்ணாலே***
காட்சிநேரம்: பு.நே.
10.30, 2.30, 6.30 மட்டும் (46404)

**நாகம்ஸ் சுன்னாகம்**
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடாக
அர்ஜுன், நமிதா,
வடிவேல் நடித்த
**ஆணை**
தினசரி: புது நேரம் 11.00, 3.00, 7.00,10.00



**நாதன்ஸ் யாழ்ப்பாணம்**
பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க
தற்காலிக புதிய நேரமாற்றம்
10.30, 1.30,4.30, இரவு 7.30
இன்று முதல் இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஷாம்,சினேகா
ஆபர்ணா
நடித்த



# விநாயகபுரத்தில் குண்டு வீச்சு 4 அதிரடிப்படையினர் காயம்

அம்பாறை மாவட்டம் விநாயகபுரத்தில் விசேட அதிரடிப்படையினர் மீது நேற்று முன் தினம் இரவு 7.30 மணியளவில் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் 4 அதிரடிப்படையினர் உட்பட 7 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அம்பாறை மற்றும் திருக்கோவில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். கஞ்சிகுடிச்சாறு முகாமிலிருந்து வழமையான கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் மீது இனந்தெரியாத நபர்களினால் வீசப்பட்ட கைக்குண்டு வெடித்துச் சிதறியதில் இவர்கள் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்களில் ஒரு பெண், ஒரு சிறுவன் உட்பட 3 பேர் பொதுமக்கள் எனத் திருக்கோவில் பொலீஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். (எ-க)

## நகரில் நேற்றிரவு படையினர் குவிப்பு

யாழ்.நகரப்பகுதியில் நேற்றிரவு பெரும் எண்ணிக்கையான படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

யாழ். ஆஸ்பத்திரி வீதி, கே.கே.எஸ். வீதி, பலாலி வீதி, ஸ்ரான்லி வீதி, ஆகியவற்றின் வீதியில் இரு பக்கமும் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

நகரப் பகுதிகடைகளை நேர காலத்துடன் மூடிய வர்த்தகர்கள் வீடுகளுக்குத் திரும்பினர்.

அன்றாடத் தேவைகளுக்காக நகரப் பகுதிக்கு வந்த மக்களும் அவசர அவசரமாக தமது தேவைகளை முடித்துக்கொண்டு அச்சத்துடன் வீடுகளுக்குத்திரும்பினர். (எ-7)

## தாக்குதல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புச் செயலர் கோத்தபய ராஜபக்ஷ, ஜனாதிபதி செயலாளர் லலித வீரதுங்க, பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி தயா சந்தகிரி, இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, கடற்படைத் தளபதி வசந்த கிரணகொட, விமானப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா மற்றும் பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஆகியோர் இந்த உயர் மட்டகுழுவில் உறுப்பினர்களாக இடம்பெற்றிருந்தனர்.

விசேட சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்டவர்களை மடக்கிப்பிடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலதிக படைகள் ஈடுபடுத்தப்படுவார்கள். இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நிகழ்ந்த கிளைமோர் தாக்குல்கள் பற்றி குறிப்பிட்ட இராணுவத் தளபதி:-

விடுதலைப் புலிகளின் இரண்டு சிறு குழுவினரே பாதுகாப்புப் படைகளுக்குகெதிராக இவற்றைச் செய்து வருகின்றார்கள் என்றும் - இவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ப)

## நோர்வே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லகத்தில் உயர் அதிகாரிகளைச் சந்தித்த அவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் திட்டமிடல் பணிப்பாளர் யாழ். அமுதன், முல்லை. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் இ.மூர்த்தி, விசேட ஆணையாளர் இ.கிருஷ்ண பிள்ளை உட்பட அரச மற்றும் அரசசார்பற்ற பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றிப்பார்வையிட்ட நோர்வேத் தூதுவர் கள்ளப்பாடு இடைத்தங்கல் முகாம் சுனாமி நினைவாலயம் ஆகியவற்றையும் பார்வையிட்டார். (எ-6-7-353)

## யாழ். குடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டறிந்தார்.

சந்திப்பின் பின் அவர் 'உதயன்'இற்குத் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் வன்செயல்களின் மட்டம் அதிகரித்துள்ளது. பலர் உயிரிழந்துள்ளனர். மற்றும் பலர் காயமடைந்துள்ளனர். இரு டிராக்டர்களில் சென்ற படையினர் தாக்கப்பட்டுள்ளனர்.

சமீப நாள்களாக, சமீப வாரமாக, வன்செயல்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றை நாம் கவனத்தில் கொண்டுள்ளோம். அது தொடர்பாக அரச அதிபருடன் கலந்துரையாடினேன்.

யாழ். இராணுவ அதிகாரி, கண்காணிப்புக் குழு அதிகாரி ஆகியோருடனும் இவைபற்றிக் கலந்துரையாடியுள்ளேன். நாளை (வெள்ளி) விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கும்போது இதுவிடயமாகக் கலந்துரையாட இருக்கின்றேன் - என்று அவர் தெரிவித்தார்.

நேற்று மாலை ஏ-9 வீதி ஊடாக வன்னி சென்ற அவர் முல்லைத்தீவுக்கு விஜயம் மேற்கொண்டார். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு தொடர்பாக அங்கு அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடினார். ( ம-ப-3-13)

# வீதிகளை மறித்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஈடுபட்டனர். ஆனால், நிலைமையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

பாடசாலை மாணவர்களுடன் சேர்ந்து பல்கலைக்கழக மாணவர்களும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் இந்தப் போராட்டத்தில் குதித்தனர்.

### பரமேஸ்வராச் சந்தியில் களேபரம்

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திப் பகுதியில் மாணவர்கள் ரயர்களைப் போட்டு எரித்து, படையினரின் பிரதான விநியோகப் பாதையான பலாலி வீதியைத் தடை செய்ததுடன் எண்ணெய் பரல்களையும் வீதியின் குறுக்கே போட்டனர். இதனையடுத்து பெரும் எண்ணிக்கையான பொலீஸாரும் படையினரும் பலாலி வீதியின் இரு மருங்கிலும் குவிக்கப்பட்டனர்.

வீதியின் நடுவே - பரமேஸ்வராச் சந்தியில் - மாணவர்கள் நிற்க அவர்களுக்கு இரு புறமும் - பலாலி வீதியில் - படையினர் ஆயுதங்களுடன் தயார் நிலையில் நின்றனர். அப்பகுதிக்கு வந்த காண்காணிப்புக் குழுவினர் இரு தரப்பினருடனும் சமரச முயற்சிகளில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் மீது திடீரென படையினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை ஏவினர். ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர். இந்த அசம்பாவிதத்தால், சமரச முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் ஓடிச் சென்று தமது வாகனத்தில் ஏறிப் புறப்பட்டுச் சென்றுவிட்டனர். மாணவர்களும் சிதறி ஓடினர். எனினும் அருகில் இருந்த இராமநாதன் வீதியில் நின்றவாறு அவர்கள் இராணுவத்தினரை நோக்கிக் கல்லெறிய ஆரம்பித்தனர்.

மாணவர்கள் போராட்டம் ஆரம்பமானகையோடு பரமேஸ்வராச் சந்திப் பகுதியில் கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. அதனைத் தொடர்ந்து பலாலி வீதியூடான போக்குவரத்தை தடைசெய்த படையினர், பலாலி வீதி வழியாக பயணித்த பொதுமக்கள் பலர்மீதும் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தினர் என்றும் - இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் ஒருவரான பண்ணாகத்தைச்சேர்ந்த துரைராஜா மதன் என்பவர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைபெற்றார் என்றும் கூறப்பட்டது.

நேற்று முன்னிரவுவரை ஆலடிச் சந்தியிலிருந்து தபாற்பெட்டிச் சந்திவரையிலான பலாலிவீதியின் முக்கிய பகுதி போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டிருந்ததுடன், அப்பகுதியில் பெரும் பதற்றநிலையும் காணப்பட்டது.

இதேவேளை, யாழ். இந்துக் கல்லூரிக்குச் சமீபமாகவுள்ள கே.கே.எஸ். வீதியிலும் மாணவர்கள் ரயர்களைப் போட்டு எரித்து சில மணிநேரம் போக்குவரத்தைத் தடைசெய்தனர். வடமராட்சி மாணவர்களும் நான்காவது நாளாகவும் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை எனில் போராட்டம் தொடரும் என்று மாணவர் அமைப்புக்கள் தெரிவித்தன.

(எ-க-6-7-12-14-15-70-86-139-190-202)

(மேலும் செய்திகள், படங்கள் 5ஆம் பக்கத்தில்)

## வீதிமறியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களின் வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டமும் வீதிமறியல் போராட்டமும் இடம்பெற்று வருகின்றன.

சிங்களத்தலைமையில் இருந்தோ, இராணுவத்தரப்பில் இருந்தோ எவ்விதமான சாதகமான முடிவுகளும் இந்த நிமிடம்வரை வராதநிலையில், நாம் எமது போராட்டத்தை தொடரவேண்டிய நிலையில் உள்ளோம்.

இருந்தும் பாடசாலைகளில் இன்று ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படவுள்ளன. பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் அனுமதி அட்டைகளைப் பெறுவதற்கு வசதியாக வீதி மறியல் போராட்டங்கள் எவையும் இன்றைய தினம் இடம்பெறமாட்டாது என்பதையும் -

ஆனால், ஏனைய மாணவர்களின் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டம் மாத்திரம் இன்றையதினம் தொடரும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கல்வி நலன்கருதி இன்று மாலையுடன் எமது போராட்டத்தினை தற்காலிகமாக இடைநிறுத்தி பரீட்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் தீவிரப் படுத்தவுள்ளோம் - என்று அதில் உள்ளது.(எ)

## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்வலம் பருத்தித்துறைப் பொலீஸ் நிலையத்திற்கு அருகேயான பாதையூடாக 524ஆம் படையணியின் தலைமையகத்திற்கு முன்பாக வந்தது அங்கு வீதியில் கொடும்பாவி வைக்கப்பட்டது.

பறை மேளம் அடிக்கப்பட்டு, ஒப்பாரிப் பாட்டுகளையும் பாடி மாணவர்கள் துக்கம் கொண்டாடினர். தொடர்ந்து பிரதான வீதி வழியாக மக்கள் அஞ்சலிக்காகக் எடுத்துச் செல்லப்பட்ட கொடும்பாவி ஹாட்லிக் கல்லூரிக்குக் கொண்டு வரப்பட்டது. கல்லூரியின் முன்பாக அமைந்துள்ள இராணுவக் காவலரணின் நுழைவாயிலில் வைக்கப்பட்ட கொடும்பாவி சகல மரணச் சடங்குகளுடனும் எரிக்கப்பட்டது. அச்சமயத்தில் பெரும் தொகையான வெடிகளும் கொளுத்தப்பட்டன.

அதன் பின்னரும் மாணவர்கள் வீதிகளில் கூடி நின்று தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். (எ-க-6-70-202)


கல்வியாண்டு-2006
தரம் 1 முதல் O/L வரை
ஆரம்பம்: 09.12.2005
வெள்ளி 4.30 p.m.
கற்சுசி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ்.
(43217)

கல்வியாண்டு 2006
தரம் 3 முதல் O/L வரை
ஆரம்பம் - 10.12.2005
சனிக்கிழமை காலை 9 மணி
சதா பொன்ஸ்
கல்வி நிலையம், அல்வாய்.
T.P: 021-2263206 (அ-40639)

வாங்கிவிட்டீர்களா?
க.பொ.த. சாதாரணதர எதிர்பார்க்கை வினாக்களை உள்ளடக்கியது
சூழற்புவியியல் - பகுதி I
(வினா-விடைத் தொகுப்பு)
ஆசிரியர் திரு. பாபு (B.A. (Geo-Spi.))
வெளியீடு:
வதனா புத்தகசாலை,
1/1, செங்குந்தா மார்க்கற்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P: 0773065187
(43780)(30-12-16-34)

10 ஆவது ஆண்டில்...
எலைற் கல்வி நிறுவனம்
147, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கல்வியாண்டு 2006
தரம் 3 முதல் O/L வரை
ஆரம்பம் 12.12.2005
திங்கள் பி.ப. 3 மணி
அனுமதிகளை டிசெம்பர் 10 இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
(43572) (30-16-12)

N.C.A
K.K.S. Road, Inuvil
கல்வியாண்டு 2006
தரம் 4 முதல் O/L வரை
ஆரம்பம் - 10.12.2005
சனி 3 P.M.

LOGIC
S.R.J. சுதன்
A/L 2006
கடந்த கால நுரிதமீட்டல்
ஆரம்பம் - 10.12.2005
சனி 12.30 P.M.
N.C.A
K.K.S. Road, Inuvil

IIS
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2006
விண்ணப்பிக்கத் தவறாதீர்கள்!
விண்ணப்ப முடிவுத்திகதி
15.12.2005
இவ் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

கல்வியாண்டு 2006
தரம் 6 முதல் O/L வரைக்கான
Evening Class ஆரம்பம் - 10.12.2005 சனி 2.00
(தூரப் பிரதேச மாணவர்களின் நலன்கருதி O/L சனி,ஞாயிறு, வகுப்பு 8.30 -2.00 ஆரம்பமாகும்)
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(43753)

புதிய கல்வியாண்டு - 2006
தரம் 1 முதல் O/L வரை
புதிய வகுப்புகள் ஆரம்பம்: 11.12.2005 ஞாயிறு காலை 9 மணி
O/L SUPER GRADE ஆசிரியர் குழு

| | |
|---|---|
| கணிதம் - திரு. K.P.S.விஜயன், திரு. M.சசிகாந் | விஞ்ஞானம்-திரு.சங்கர்வாமன், திரு. M.A.நிரோஜன் |
| தமிழ் - திரு. G.ஜனகன் | சமூ.கல்வி - திரு. E.A.ஜெயன் |
| ஆங்கிலம் - திரு. Y.ஜெந்தன் | சமயம் - திரு. B.மயூதரன் |
| வர்த்தகம் - திரு.S.ஜீவா | சுகாதாரம் - திரு. கங்காசுதன் |

❋ கடந்த வருட O/L பெறுபேறு எமது வெற்றியின் முத்திரை (அ-40680)
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்


EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.